எமது கல்லூரி வைரவிழாவை நோக்கி – 2019

# கலைச்சோலை - 2019

இதழ்- 33



## உயர்தரமாணவமன்ற வருடாந்த வெளியீடு

## கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி

தருமபுரம், பரந்தன்.

# கலைச்சோலை

இதழ் – 33

**மகுட வாக்கியம்**

**வாழ்வாங்கு வாழக்கல்மின்**

**தூரநோக்கு**

**அறிவியல் உலகில் வீறுநடைபோடும்**

**சமுதாயத்தை உருவாக்கல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : கலைச்சோலை

வெளியீடு : 33

ஆக்கம் : உயர்தர மாணவர் ஒன்றியம்

பதிப்புரிமை : உயர்தர மாணவர் மன்றம்
கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி

அச்சுப்பதிப்பு : தனு பிறிண்டேர்ஸ்
தருமபுரம்.

பக்கம் : 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துமத குரு அவர்களின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் உயர்தரப் பாடசாலைகளில் ஒன்றாகிய கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரியானது இன்று 33வது இதழாக "கலைச்சோலை" என்னும் சஞ்சிகையை வெளியிடுவது வரலாற்றுப் பெருமை மிக்க செயற்பாடாகும்.

உயர்தர மாணவர் ஒன்றியத்தால் வெளியீடு செய்யப்படுகின்ற இந்தக் கலைச்சோலையானது மாணவர்களது பல்வேறு ஆக்கங்களையும் தாங்கியதாக அவர்களது உள்ளக் கிடக்கையில் ஊற்றெடுத்த அமுத சுரபியாக வெளிவந்துள்ளது என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இக் கல்லூரியானது கல்வியில் மாத்திரமல்லாது இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தனக்கேயுரித்தான ஒரு தனியிடத்தைப் பிடித்துள்ளது.

இக்கலைச்சோலையானது இடையில் நின்றுவிடாது காலம் காலமாக கனதியான பல ஆக்கங்களைத் தாங்கியதாய் வெளிவரவேண்டும் என்பதோடு இதனால் மாணவர்களது மனங்களில் மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டு மலரும் சோலையாக "கலைச்சோலை" அமைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்**
**புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்**
**கரைச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி

கிளி/தர்மபுரம் உயர்தரப்பிரிவு மாணவர் ஒன்றியத்தினால் வருடாவருடம் "கலைச்சோலை" மலர் வெளியிடப்படுவதையிட்டு களிகூர்வதோடு இவ்வருடம் 33வது மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய உலகும் அறிவியலும் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டிருப்பதனால் அவற்றோடு போட்டி போட்டு வாழவேண்டிய இளம் தலைமுறையினர் தம்மை வளர்த்தெடுப்பதற்கு பதிலாக தங்களையும் சமூகத்தையும் அழிக்கக் கூடிய, சிதைக்கக்கூடிய செயற்பாடுகளை விஞ்சியவாறு செய்ய முற்படுவது துர்பாக்கியநிலை ஆகும். எதிர்கால தூண்களாக விளங்குகின்ற மாணவர்களின் புத்தாக்கங்களும், உயரிய சிந்தனைகளும், தேடலின் விளைவுகளும், அனுபவ ஆக்கங்களும் கலைச்சோலையாக மாணவர்களுக்கு மாணவர்களால் வழங்கப்படுவது காலத்தின் தேவையுமாகும்.

கால சூழமைவுகளாலும் அதன் வளர்ச்சிகளாலும் உலகமே குறுகிய நிலையில் ஒரு போனாவை கையில் எடுத்து எழுத்துருவில் ஒரு கடிதம் தானும் எழுத முன்வராத நிலையில், எமது மாணவர்கள் இந்த சமூகத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருந்து இம்மலரை வெளியிடுவது பாராட்டுக்குரியது. இம்மலரை வெளியிட்ட உயர்தர மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டி இறையாசீர் வேண்டி நிற்கிறேன்

**அ.சில்வெஸ்ரர்தாஸ்,**
**பங்குத்தந்தை,**
**தருமபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் கலைச்சோலை - 33வது இதழுக்கு ஆசி வழங்குவதற்காக மகிழ்ச்சியடைகின்றேன். கிளிநொச்சி வலய பாடசாலைகளில் வருடம் தோறும் இத்தகையதொரு கைங்கரியத்தை ஆற்றி வருகின்ற கல்லூரி என்ற வகையில் இக்கல்லூரியை நான் பாராட்டுகின்றேன்.

மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக மாத்திரம் நின்றுவிடாது விழுமியச் செயற்பாடுகளிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடுவதன் மூலம் தமது திறமைகளை மேன்மேலும் வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதற்கு இப்பாடசாலை எடுத்துக் காட்டாக அமைகின்றது. "இதயத்திற்கு கல்வியூட்டாமல் புத்திக்கு கல்வியூட்டல் கல்வியல்ல" என்பது தத்துவஞானி அரிஸ்டோட்டல் அவர்களது அரியவாக்கு. மனிதத்துடன் அனைத்தையும் இயக்கும் வலைப்பின்னல் உருவாக சக்தி மட்டும் போதாது இதயமும் வேண்டும். என்பதற்கு அமைவானதே இன்றைய காலக்கற்றல் செயற்பாடுகள்.

மாணவர்களது ஆக்கங்களை மாத்திரம் தாங்கி வருகின்ற இவ் இதழானது இவர்களது ஆற்றல்கள், தேடல்கள், சிந்தனைக்கிளறல்கள், கலையார்வம், நவீன உலகியலோடு வீறுநடை போடும் உத்வேகம் என்பவற்றை வளர்த்துக்காட்டும் களமாக அமையும் என்பது வெள்ளிடை மலை போன்றதே.

இம்மலர் நிறைவு பெறுவதற்கு பாடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்களே இதுமேலும் பல ஆக்கங்களைத் தாங்கி பலபடைப்பாளிகளை உருவாக்கி புதுப்பொலிவுடன் புலர வாழ்த்துகிறேன்.

**திருமதி.க.அபிராமி**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டாவளை கோட்டக்கல்வி அலுவலரின் வாழ்த்துச்செய்தி

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினரால் வருடாந்தம் வெளியிடப்படும் கலைச்சோலை இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

கையெழுத்து பிரதியாக பிறந்து படிப்படியாக வளர்ந்து அச்சுவாகனமேறி வலம் வரும் கலைச்சோலைக்கு அகவை 33 ஆகிறது. 33 வருட காலத்தில் கலைச்சோலை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை இதழ்களை வாசிக்கும் போது உணர முடிகிறது. மாணவர்களின் கவனம் படைப்பாக்கத்தில் குறைந்து விட்டதாக கூறப்படுகின்ற சூழலில் சிறந்த ஆக்கங்களை தாங்கி இக் கலைச்சோலை வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. பெருமைபட வைக்கிறது. இவ்விதழ் மலர அரும்பணியாற்றிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு மேலும் மேலும் கலைச்சோலை மலர்ந்து நறுமணம் கமழ வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ஆ. உதயணன்**
**கோட்டக்கல்வி அலுவலர்**
**கண்டாவளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் உள்ளத்திலிருந்து

எமது கல்லூரியின் 33வது மலராக மலர்கின்ற கலைச்சோலை மலருக்கு ஆசி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். உலகியல் மாற்றங்களுக்கு ஏற்ப மாணவர்கள் வெளிப்படுத்தும் சவால்களை மையமாகக் கொண்டு நற் பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்னும் உன்னத நோக்கோடு உயர்தர மாணவர்களின் சிறப்பான இச் செயற்பாட்டை நான் பாராட்டுகின்றேன்.

கலைச்சோலை மலரானது பல ஆக்கங்களைச் சுமந்து வெளிவருகின்றமை அறிவியல் வளர்ச்சியின் ஒரு படியாகும். சுய சிந்தனை வளர்ச்சியை வளப்படுத்துவதன் மூலம் ஏனைய செயற்பாடுகள் அனைத்தும் தானாகவே வளரும் என்ற வகையில் இப்பணியில் ஈடுபட்டு அயராது உழைத்த மலர்க்குழு மற்றும் ஆசிரிய மாணவர்களின் பங்களிப்பு சாலச் சிறந்ததாகும்.

எமது கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கான அடித்தளமாக அமையும் இந்நூலானது எத்தனை இடர்கள் வரினும் கொண்ட கொள்கை குன்றிடாத மாணவர்களது விடாமுயற்சியும், திறமைகளின் வெளிப்பாடும் வியப்பிற்குரியதே. மேலும் இப்படைப்பானது இன்னும் பல பாராட்டுக்களையும், நற் பெயர்களையும் பெற்றுக் கொள்வதுடன் இது ஒவ்வொரு வருடமும் இன்னும் சிறப்பாக மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**அதிபர்**
**திரு.சி.முருகானந்தன்**
**கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி அதிபரின் உள்ளத்திலிருந்து

"வாழக்கல்மின்" என்ற ஞாலக் கொள்கையுடன் கிளி நகரின் ஓங்கு தமிழ் அறிவியல் கூடமாக விளங்கும் எமது கல்லூரியின் உயர்தர மாணவர்களால் வெளியிடப்படும் கலைச்சோலை மலரிற்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தொழில்நுட்ப வளர்ச்சி மிகு உலகில் காலத்திற்கு ஏற்றவாறு இம்மலர் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

குறுகிய காலத்தில் மாணவ உள வெளியீடுகளை அறிவியல் சார்ந்து அச்சேற்றி கரங்களில் தவழவிட உழைத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும்.

இம்மலர் வெளியீட்டை பாராட்டுவதோடு இனிவரும் நாளிலும் இப்பணி தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதி அதிபர்.**
**திரு.ம.சசிக்குமார்**
**கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவி அதிபரின் உள்ளத்திலிருந்து

மாறிவரும் உலக மாற்றங்களுக்கு ஏற்ப மலர்ந்து வரும் மாணவச் சமுதாயமானது சமூகத்தின் நிலையான அபிவிருத்தியின் ஒரு படிக்கல்லாக அமைகிறது. என்பதற்கு எடுத்துக்காட்டாக எமது உயர்தர மாணவர்களது கலைச்சோலை 33வது மலராக மலர்கிறது என்பதில் மகிழ்வடைகின்றேன்.

அறிவியல் உலகில் வீறுநடை போடுகின்ற மாணவர்களைத் தாங்கி வாழுகின்ற இன்றைய சமூகத்திலே மாணவர்களிடையே வாசிப்புப்பழக்கம், எழுத்தாற்றல், தேடல் முயற்சிகள் என்பன நலிவடைந்து வருகின்றமை கண்கூடு. பாடச் செயற்பாடுகளோடு கூடவே இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் அக்கறை கொண்டு இதுபோன்ற கைங்கரியங்களைத் திறம்படச் செய்துவரும் மாணவர்களது பல்துறை ஆற்றல்களும் பாராட்டுதற்குரியவையாகும்.

இம் மாணவர்களது முயற்சி ஏனைய மாணவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைவதுடன் இவ் இதழில் மலர்ந்துள்ள ஆக்கங்கள் இதிலுள்ள மாணவர்களது திறமையை வெளிப்படுத்திக் காட்டும் தேடல்களாகவே வெளியாகின்றன. இவை மாணவர்களது ஆக்கச் செயற்பாடுகளில் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் எதிர்கால எழுத்தாளர்கள் வரிசையில் இடம்பிடிப்பதற்கு அடித்தளமாகவும் அமைவதுடன் இதன்மூலம் மாணவர்களது அறிவு, திறன், விருத்தி என்பன உயர்நிலை பெற்று மிளிரும் என்பதில் ஐயமில்லை. காத்திரமான பல ஆக்கங்களைத் தாங்கியதான கலைச்சோலை என்றும் காலம் காலமாக மலர்ந்து மணம்பரப்ப வாழ்த்துகிறேன்.

**உதவி அதிபர்**
**திருமதி.சி.ஜோதீஸ்வரன்**
**கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதித் தலைவரின் உள்ளத்திலிருந்து

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியின் 33வது இதழாக வெளியிடப்படுகின்ற கலைச்சோலை என்னும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலரானது எமது கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினரின் பெரு முயற்சியின் வெளிப்பாடாகும். இன்றைய உலகமயமாக்கல் நிலமை உலவி வருகின்ற இக்காலகட்டத்தில் தேடல்களின் முயற்சியில் மாணவர்கள் துலங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களது துலங்கலின் வெளிப்பாடாக இன்று துலங்கிக் கொண்டிருப்பதே கலைச்சோலை என்னும் கவிநுறு இதழாகும். இது மாணவர்களது கலையார்வத்தை வெளிப்படுத்திக் காட்டும் களமாக அமைகிறது.

இதன்மூலம் மாணவர்களது புத்தாக்க சிந்தனைகளும், தேடல் முயற்சிகளும், துலங்கலின் வெளிப்பாடுகளும் துல்லியமாகிறது. புதியதொரு சமுதாயத்தை புதிய சிந்தனைகளுடன் வளர்த்தெடுக்கும் இவ்வெளியீடு மென்மேலும் சிறப்படைந்து புதுப்பொலிவு பெற வாழ்த்துகிறேன்.

**திரு.செ.திலீபன்**
**பகுதித்தலைவர் - உயர்தரம்**
**கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போசகரின் உள்ளத்திலிருந்து

2019ம் ஆண்டு 33ம் இதழாக வெளிவரும் கலைச்சோலை சஞ்சிகைக்கான ஆசிச்செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினால் வருடாவருடம் கலைச்சோலை சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வருடம் வெளியிடப்படும் சஞ்சிகையானது மாணவர்களது பல்வேறு துறைகள் சார்ந்த ஆக்கங்களைக் கொண்டு வெளிவருகின்றது. நவீன உலகின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மாணவர்கள் பல்வேறு மூலங்களில் இருந்தும் குறிப்பாக இணையத்தேடல் மூலம் பல்வேறு ஆக்கங்களை வடிவமைத்துள்ளார்கள். இச்சஞ்சிகையானது சிறப்பான வெளியீடாக அமைவதற்கு போசகர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.ம.ரவிவர்மன்**
**போசகர்**
**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர்**
**கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர் என்ற வகையிலே கலைச்சோலை மலர் - 33ற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். "தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலன் தோன்றலின் தோன்றாமை நன்று என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் தமது திறமைகளையும் கலை கலாசாரங்களையும் பேணிப் பாதுகாக்கும் முகமாக தருமபுர மண்ணின் கலை கலாசாரங்களை பிரதிபலிப்பதுடன் அறிவியல் உலகில் வீறுநடைபோடும் மாணவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்நூலானது எழுத்துருவாக்கபட்டுள்ளது. அதன் இனிமையால் தருமபுரம் பட்டொளி வீசி பறக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**யோ.தர்சிகன்**
**தலைவர்**
**உயர்தர மாணவர் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து

எமது கல்லூரியின் உயர்தர மன்றத்தினரால் 33வது இதழாக வெளியீடு செய்யப்படுகின்ற "கலைச்சோலை" இதழுக்கு ஆசிவழங்குவதையிட்டு மனம் மகிழ்வடைகின்றேன்.

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர்களது உள்ளத்தின் உந்து சக்தியாக இவ்வருடமும் "கலைச்சோலை" என்னும் காலத்தால் அழியாத காத்திரமான சோலை மலர்ந்துள்ளது. இது மலர்ந்த இலக்கியப் பசிக்குத் தீனிபோடும் என்பதில் ஐயமில்லை. சமுதாயத்தின் பட்டொளிச் சிதறல்களை எழுத்துருவாக்கி கலைச்சோலை என்னும் படையலைப் படைத்துள்ளோம். அதன் சுவையால் எமது பிரதேச மாணவர் சமூகம் தளைத்தோங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**துர்சிகா செல்வகுமார் [இதழாசிரியர்]**
**வர்த்தகப்பிரிவு [2019]**
**கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் உள்ளே....


| | |
|---|---|
| சாதனைக்காய்ப் புறப்படு | 15 |
| எங்கள் தமிழ் மொழியை நாமே ஒதுக்கித் தள்ளினால் | 17 |
| காலத்தை புரிந்து கொள்ளாத போது | 19 |
| என்னம்மா | 20 |
| நனோ தொழில்நுட்பம் | 22 |
| விஞ்ஞானத்தின் விந்தை | 24 |
| நண்பேன்டா | 25 |
| தமிழ் | 26 |
| அனுதினமும் GPS | 27 |
| இறப்பு உன் உடன்பிறப்பு | 29 |
| மறக்க முடியாத பள்ளி நாட்கள் | 30 |
| கருவறையிலிருந்து கல்லறை வரை | 31 |
| அறிவுக்கு விருந்து | 32 |
| கல்லூரி வாழ்க்கை | 35 |
| அர்த்தமுள்ள இயற்கை | 36 |
| இயற்கை | 37 |
| ESP சக்தி | 38 |
| ஆசிரியர்களை மதியுங்கள் | 40 |
| பாசம் | 42 |
| தொல்லைபேசி | 43 |
| விழித்தெழு பெண் இனமே | 44 |
| என் கல்லூரித் தடங்கள் | 45 |
| சிலவேளை இப்படி நடக்கலாம் | 47 |
| இணையம் எப்படி இயங்குகின்றது | 48 |
| இன்றைய சமுதாயத்தில் மாறிவரும் முதியோர் நிலை | 49 |
| எனக்குள்ளும் எண்ணற்ற | 52 |
| பள்ளி ஞாபகம் | 53 |
| எம் தேச உறவுகள் | 54 |
| ஊடகவியல் | 55 |
| இயற்கை | 56 |
| சொல்லிவிட வார்த்தைகள் இல்லை | 57 |
| என் மகனாக | 58 |
| பொறியியல் | 61 |
| இணைய உலாவிகள் | 63 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக்காய் புறப்படு

கற்பனையில் வாழ்ந்து கொண்டிருக்கும்
மானிடா - சற்று
கண் விழித்துப் பாரடா!
அத்தனை சுமைகள் தாங்கி - நீ
பெற்ற வித்தைகள் எத்தனை?

விடியும் முன்னெழும்பி தூங்கும்
சேவலை எழுப்பிய நாட்களுள் - ஒவ்வொரு
நொடியும் நீ செய்த
சாதனைகள் எத்தனை?

கல்வியில் மோதிவரும் அலைகளும்
முள்ளின் நடுவிலுள்ள ரோஜாக்களும்
துள்ளி ஓடும் மான்களும் - உனைக்கண்டு
சிரிப்பது தெரியுமா?

உன் சோம்பலை விரட்டிவிடு - அதுவும்
சாதனை செய்யுமென்ற அப்துல்கலாமும்
எமைப்போல ஆறறிவுள்ள மனிதன் தானே
எம்மைக்கண்டு மட்டும் ஏனடா
சாதனைகள் ஒழிந்து கொள்கின்றது?

சொற்ப இன்பத்துக்காய்
சோர்ந்து போன என்னை நினைக்கையில்
தீர்ந்து போன இரவுகளை நினைத்து
தேக மெல்லாம் அழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி செய்தால் உன்னால்
முடியாதது என்னதானோ?
கொட்டிக் கிடக்கும் புத்தகங்கள்
தட்டிக் கொடுக்கும் ஆசிரியர்கள்
இத்தனைக்கும் மேல் ஈன்றெடுத்த பெற்றோர்கள்
அத்தனை உறவுகளும் - உன்
சாதனை காணத்தானோ
பல வேதனை பெற்றன.

அடிமை இனமில்லை நாம்
அறிவு வாளேந்தி துயரங்களை
அறுக்கப் புறப்படடா
சோதனைகள் எல்லாம்
சாதனை ஆகுமடா
தேடி அலைவதெல்லாம்
ஓடி வருவதில்லை
நாடி வருவதெல்லாம் - நாம் தருவதில்லை

**செ.கலைவாணி**
**கலைப்பிரிவு 2020**

## சிந்தனைக்குச் சில

காலை நேரம் எப்படி தோன்றுகிறதோ மாலை நேரமும் அப்படியே தோன்றுகிறது. விடியும் பொழுதிற்கும் முடியும் பொழுதிற்கும் தோற்றத்தில் வேறுபாடில்லை. இன்ப துன்பங்களையும் அப்படியே நினைத்து விடு. எந்தக் கட்டத்திலும் நீ அழ வேண்டிய அவசியமிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ் மொழியை நாமே ஒதுக்கித் தள்ளினால்

உலகில் வாழுகின்ற இனங்களில் தன் இனத்தின் பெருமையை அறியாத ஓர் இனம் இருக்குமாக இருந்தால் அது தமிழினமாக மட்டுமே இருக்க முடியும். எங்கள் இனத்தின் பெருமையை நாங்கள் உணராதபோது அதை நினைத்து பெருமையடையாத போது எம் இனத்தின் பெருமையை மற்றவர்கள் அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது எந்த வகையிலும் நியாயமாகாது. உலகில் உள்ள மொழிகளில் தமிழ்மொழி காலத்தால் முந்தியது. இலக்கியச் செழுமை உடையது. பக்திமொழி என்று போற்றப்படுவது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக திருக்குறளை உலகுக்கு தந்தது என்ற பெருமைகள் எங்கள் தமிழ் மொழிக்கு உண்டு. அதனால் தான் தமிழ் மொழியை செம்மொழியாக இந்த உலகம் ஏற்றுக் கொண்டது. இருந்தும் தமிழ்மொழியைக் கற்பது இயலாமையின் நிலைமை என்று கருதப்படுமளவுக்கு தமிழ் மொழியை நாங்கள் விலக்கி வருகின்றோம். தவிர, ஆரம்பக் கல்வியைக் கூட ஆங்கிலத்தில் போதித்தால் நல்லது என்று நினைக்கிற அளவுக்கு எங்கள் நிலைமை வந்துவிட்டது.

இதன் வெளிப்பாடாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் கற்கின்றவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைவடைந்திருப்பதைக் காண முடியும். தமிழ் மொழியும் அதனோடு இணைந்து இந்து நாகரீகம், இந்து சமயம் என்பவற்றைப் படிப்படியாக மேற்கொள்வது கௌரவத்திற்குரியதல்ல என்று நினைக்கிற அளவில் எங்கள் மொழியை எங்கள் சமயத்தை நாங்களே ஓரங்கட்டி வருகின்றோம். ஆனால் ஏனைய இனம் சார்ந்தவர்களும், மதம் சார்ந்தவர்களும் தங்கள் மொழியை தங்கள் மதத்தைக் கற்பதைப் பெருமைக்குரிய விடயமாகக் கருதுகின்றனர். பௌத்த மதத்தைப் பொறுத்தவரை சிங்கள மாணவர்கள் பௌத்தத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு ஏகப்பட்ட ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதுடன் பௌத்த மதத்துக்கான பிரிவேனாப் பாடசாலைகள் பௌத்தத்தை கல்வியாகப் போதிப்பதில் நிறுவனமயப்பட்டுச் செயலாற்றுகின்றன.

இது தவிர இந்தியா, ஜப்பான் முதலிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பௌத்தத்தைக் கற்கவும் ஆய்வு செய்யவுமென கணிசமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதேபோல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய மார்க்கத்தைப் பட்டப்படிப்பாக மேற்கொள்வதில் முஸ்லீம் மாணவர்கள் பலர் ஆர்வம் காட்டுகின்றனர். தவிர கிறிஸ்தவ நாகரீகத்தை படிப்பதில் அந்த மதத்தினர் மும்முரமாக இருப்பதும் கண்கூடு.

ஆனால் நாங்கள் தான் தமிழையும் சைவத்தையும் ஓரங்கட்டி எங்களை உயர்த்த நினைக்கிறோம். இந்த இழி நிலை எங்களை விட்டு மாறாத வரை எங்கள் இனத்தின் எதிர்காலம் என்பது இருள் நிறைந்ததாகவே இருக்கும்.

"அறியாமைதான் துயரத்தின் தாய்"

**கே.நிகழ்யா**
**கலைப்பிரிவு [2020]**

## சிந்தனைக்குச் சில

பணமும் பதவியும் மோசமானவை என்று ஞானிகள் சொல்கிறார்கள். அவை வரக்கூடாதவனுக்கு வருவதால் கிடைக்ககூடாதவனுக்கு கிடைப்பதால்!

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி, ஒரு தவறை திரும்ப திரும்பச் செய்கிறவன் மூடன், ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை, தன்னையறியாமல் தவறு செய்து தன்னையறிந்து திருத்திக் கொள்கிறவனே மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலத்தை புரிந்து கொள்ளாத போது....

காலத்தின் கையில் குழந்தையாய் நாம்
நமது கையில் பொம்மையாய்க் காலம்

அழகிய குளத்தில் தாமரையாய்க் காலம்
தாமரைக் குளத்தில் தவளையாய் நாம்

குப்பைக்கு நடுவே புதையலாய்க் காலம்
புதையலை மூடிய குப்பையாய் நாம்

விதையுள் மறைந்த மரமாய்க் காலம்
மரத்தை வெட்டும் கருவியாய் நாம்

இசையின் நடுவே மௌனமாய்க் காலம்
ஓசையைக் கேட்கும் பேதையாய் நாம்...

காலத்தை புரிந்து கொண்ட போது....

ஆழமான கடலாய் காலம்
கடலை கடக்கும் கப்பலாய் நாம்

உயரமான வானமாய்க் காலம்
பறந்து திரியும் பறவையாய் நாம்

புல்லாங்குழல்களின் துளைகளாய்க் காலம்
அதில் காற்றை நுழைக்கும் மேதையாய் நாம்

பாலையில் தோன்றும் கானல் நீராய்க் காலம்
மண்ணைக் குளிரச் செய்யும் மழைத்துளியாய் நாம்

கல்லுள் மறைந்த சிற்பமாய்க் காலம்
கல்லைச் செதுக்கும் சிற்பியாய் நாம்

காலம் அனைவருக்கும் பொதுவாகத் தான் உள்ளது. அதனைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் தான் வேறுபட்டவர்களாக உள்ளார்கள்.

**செ.டிலக்ஷா**
**உயிரியல் பிரிவு (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் அம்மா

வயது வித்தியாசம் பார்த்ததில்லை அம்மாவின்
கொஞ்சலில் மட்டும்
இன்னும் தாயன்பில் குழந்தையாய்
தவழ்ந்த வண்ணம்
நான் உங்கள் முன்னிலையில்....

மூன்றெழுத்தில் கவிதை சொல்ல சொன்னால்
அம்மா என்று சொல்ல முடியும்
சொல்லிலடங்கா உன் தியாகம் அம்மா...

பத்து மாதம் வயிற்றிலும் நடக்கும் வரை தோழிலும்
மடியிலும் எனை சுமந்து
வாழ்நாள் முழுவதும் நினைவாய்
மனதிலும் எனை சுமந்தவள்
என் அம்மா....

என் முகம் கூட தெரியாமல்
பத்து மாதம் எனை நோகாமல் நேசித்து
சுமந்தவள் என் அம்மா....

மழையில் நனைந்த என்னை
எல்லோரும் திட்டியபோது - மழையை
திட்டியது நீ மட்டும் தானே அம்மா....

ஒவ்வொரு நாளும் கவலைப்படுவாய் அம்மா
ஒருநாளும் உனை பற்றி
கவலைப்படவில்லையே அம்மா....

அடி முடி தேடினாலும் அகராதியை புரட்டினாலும்
முழுமையான அர்த்தம் அறிய முடியாது
உயிர் சித்திரம் நீ அம்மா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரெழுத்தில் "அ" எழுத்து மெய் எழுத்தில் "ம்" எழுத்து
உயிர்மெய் எழுத்தில் "மா" எழுத்து
அழகு தமிழில் சேர்த்தெடுத்த - முத்து
என் அம்மா...

உடலையும் உயிரையும் இணைத்து
அம்மா என்பதால் என்னமோ
தமிழ் உயிர் பெற்றது...

அன்பு, அக்கறை, அரவணைப்பு, பாசம், நேசம், தியாகம்
எல்லா உணர்வுகளையும் ஒரே இடத்தில்
பெற முடிந்தால் அது தான் சொர்க்கம் - நீ
எனக்கு சொர்க்கமே அம்மா ....

தாய்மையின் வலி என்னவென்று
எனக்கும் தெரியும் - அதனால் தான்
உன்னுடனே சேர்ந்து நானும் அழுதேன்
நான் பிறக்கையில்

என்றும் என் வாழ்வில் உனை மறக்காமல்
இறுதிவரை உனை சுமக்கவேண்டும்
அம்மா....

**ந.ஜெயனி**
**வர்த்தகப்பிரிவு (2020)**

## சிந்தனைக்குச் சில

போர் என்பது வீரன் என்பதைத் தீர்மானிப்பது இல்லை. யார் மிஞ்சியிருப்பது என்பதைத் தீர்மானிப்பது ஆகும்.

வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனோ தொழில்நுட்பம்

புதிய கண்டுபிடிப்புக்களாலும் சமூக மாற்றங்களாலும் மாறிவரும் உலகத்திற்கேற்ப தொழிநுட்பமும் மிக வேகமாக மாற்றமடைந்து வருகிறது. ஆரம்பத்தில் உணவு, உறையுள் என்பவற்றிற்காக மட்டும் பல்வேறு வழிகளை கண்டுபிடித்த மனிதன் இன்று தொழில்நுட்ப உபகரணங்கள் இன்றி வாழ முடியாது என்ற நிலைக்கு வந்து விட்டான். இன்று நனோ தொழிநுட்பம் எனும் புதிய கண்டுபிடிப்பையும் கண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றான். இக் கண்டுபிடிப்பு அடுத்த தலைமுறையின் கண்டுபிடிப்பாகும். எனவே நாம் இதனை பற்றி அறிந்திருத்தல் முக்கியமாகும்.

நனோ தொழில்நுட்பம் எனப்படுவது 100nmக்கும் குறைவான அளவுகளால் அமைந்த உருவ அமைப்புக்களை கொண்டு அச்சிறு அளவாக அமையும் போது சிறப்பாக வெளிப்படும் பண்புகளைக் கொண்டு ஆக்கப்படும் கருவிகளும் அப்பொருட் பண்புகளை பயன்படுத்தும் நுட்பவியலும் நனோ தொழில்நுட்பம் எனப்படும். பலதுறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஏற்படுத்திவரும் ஒரு நுட்பம் ஆகையால் நனோ தொழில்நுட்பங்கள் ஒரு தனிப்பட்ட துறையில் மாத்திரம் செல்வாக்குச் செலுத்த தொடங்கவில்லை. மாறாக உயிரியல், வேதியல், இயற்பியல், மின்னியல், மருத்துவம், பொறியியல் என்று பல்துறைகளில் தாக்கம் செய்து வருகிறது.

நனோ தொழில்நுட்பத்தின் தொடக்கம் பற்றி நோக்குவோமேயானால் இது பற்றி முதன்முதலில் டிசம்பர் 29ம் திகதி 1959ல் இயற்பியல் ஆய்வாளரும் பின்னர் நோபல் பரிசு பெற்ற அறிஞரும் ஆகிய ரிச்சார்டு ஃபோயின்மன் ஓர் உரையினை நிகழ்த்தினார். அணு அளவில் மாற்றங்கள் நடைபெறுவதை இயற்கை தடை செய்யவில்லை என்றார். வருங்காலத்தில் இத் தொழில்நுட்பத்தால் இயற்பியலின் வழி பயன்பாடுகளில் மாற்றம் ஏற்படும் என்பதனையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

மேலும் இலத்திரனியல் உலகில் இதன் பாவனை பெரிய பங்காற்ற ஆரம்பித்து விட்டது. இரசாயனவியலிலும் பௌதீகவியலிலும், உயிரியலிலும் பொருள் வடிவமைப்பு உருவாக்கத்திலும் இவற்றின் பங்களிப்பு இருக்கின்றன. இன்று உலோகக் கடத்திகள் கொண்டு உருவாக்கப்படும் ஒப்பீட்டளவில் பெரிய இலத்திரனியல் சுற்றுக்களை இந்த நனோ கடத்திகள் கொண்டு ஒரு கைவிரல் அளவில் உருவாக்கி விட முடியும். இன்று யீடநு நிறுவனம் கூட இதனை பாவிக்க ஆரம்பித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல விதங்களில் பயன்படும் இத்தொழில்நுட்பம் இன்னும் முழுமையாக கண்டுபிடிக்கப்படுவதால் அதன் தீமைகள் பற்றி அறியமுடியவில்லை. எனினும் இத் தொழில்நுட்பத்தின் விரிந்த பங்களிப்பு கருதி இந்தியா உட்பட பலநாடுகளிலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது. இது அடுத்த தலைமுறையின் தொழில்நுட்பம் என கருதப்படுவதால் ஆராய்ச்சிகள் மிக இரகசியமாக நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் மிகப்பெரிய தொழில்நுட்ப மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளது இத் தொழில்நுட்பம் என்றால் மிகையாகாது.

**ஜெ.ரஜிதன்**
**கணிதப்பிரிவு (2020)**

## சிந்தனைக்குச் சில

நீ யாரை ஏமாற்றினாலும் இறுதியில் ஏமாற்றம் அடைவது நீதான்

நம்பிக்கை ஒன்றே மனிதனை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும்

முடிந்தாலும், முடியாவிட்டாலும் உதவ மாட்டேன் என்று சொல்லாதீர்கள்

அன்புக்கும் அறிவுக்கும் எல்லையே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானத்தின் விந்தை

விஞ்ஞானம் விஞ்ஞானம் விந்தையான விஞ்ஞானம்
வெறுப்பை விட்டு விருப்பத்தோடு வாழும் காலம் இது
வெறுப்பை அகற்றிய விஞ்ஞானம் இது
குடிசையில் மக்கள் வாழ்ந்த காலம் அது
இப்போ ஏசி ரூமில் வாழும் காலம் இது

கால் நடையாக சென்றான் அன்று மனிதன்
ஆகாயத்தில் பறக்கின்றான் இன்று மனிதன்
இலைகுழைகளை உடுத்தான் அன்று மனிதன்
உடைகளை உருவாக்கினான் இன்று மனிதன்

மண்ணுலகை விட்டு விண்ணுலகை தாண்டி விட்ட காலம் இது
அன்று சந்திரனை தொட்டான் ஆம்ஸ்ரோங்
இன்று சந்திரனை தொட்டவர்கள் எத்தனை பேர்

எத்தனை வகை வகையான காட்சிகள்
இவ்வுலகை முத்தமிட்டு கொண்டிருக்கும்
இவ் வகையான உலகத்தை படைத்த இறைவனையே
கதிகலங்க வைத்து விட்டதே விஞ்ஞானம் என்னும் மாய விந்தை

இறந்த காலத்தை முடித்து
நிகழ்காலத்தை கொண்டு சென்று
எதிர்காலத்தை கட்டியெழுப்பும்
அறிஞர் படைப்பே விஞ்ஞானம்

காலம் எனும் படகில் ஏறி
கரை எனும் கடல் கடந்து
வறுமை எனும் சிகரம் உடைத்து
வந்து விட்டதே விஞ்ஞானத்தின் விந்தை

**நா.மிதுர்சனா**
**தரம் 12**
**கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நண்பேண்டா

நண்பேண்டா
உலகில் ஆக பெரிய அதிசயம் நட்பு
மானுடம் பெற்ற மிக பெரிய வரம் நட்பு
நட்பு கங்கையை விட புனிதமானது
எதையும் எதிர்பாராது வருவது நட்பு

ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரே உறவு நட்பு
சாதி, மதம், இனம் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது நட்பு
எதையும் விட்டுக்கொடுக்கும் நட்பு
பிரச்சினைக்கு நல்ல தீர்வு தரும் நட்பு
வயது வரம்பு கிடையாத ஓர் அதிசய உறவு நட்பு
விபரிக்க இயலாத சொந்தம் நட்பு
விவரம் அறியாத வயதில் இருந்து கூடவே வருவது நட்பு

ஒரு நண்பன் நூறு பேருக்கு சமம்
நட்பின் சங்கமம் குதுகலத்தின் பிறப்பிடம்
சந்தோசத்தின் இருப்பிடம்
எதையும் பேசலாம் நண்பனிடம்
எளிதில் விடை கிடைக்கும் அவனிடம்

இராமன் குகன் மீது வைத்த நட்பு உயர்ந்தது
துரியோதனன் கர்ணன் மீது கொண்ட நட்பு அபாரமானது
கண்ணன் குசேலன் மீது செலுத்திய அளவில்லாத நட்பு அளப்பரியது
இப்படி இதிகாசம் கூறும் நட்பு ஏராளம்

ஜல்லிக்கட்டு சம்பவமும், சங்கமும் நட்பால் தானே
இரத்த சம்மந்தம் இல்லை, உறவு முறையும் இல்லை அப்போது அவன் யார்?
சொந்தங்கள் கேட்ட போது "என் நண்பன்" என்று பெருமிதத்துடன் மார்பு தட்டி
கூறுவானே அது போதும் நட்புக்கு
அந்த ஒரு வார்த்தை போதும் நட்பு கோபுரம் போல் உயர்ந்து நிற்க
நட்பு புனிதமானது மட்டுமல்ல, ஆச்சரியமானது மட்டுமல்ல
மிகவும் அபூர்வமானது

**கு.ஜசிதுன்**
**தரம் : 13**
**தொழில்நுட்பம் (2019)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

தமிழெங்கள் மொழியென்பேன் வழிமீது
இமையென்பேன் தினமெம்மில்
திளைத்தெழும் தீங்கிலா மொழியென்பேன்
பகைவெல்லும் வீரமும் பாவையர் காதலும்

அகமென்றும் புறமென்னும் சீரெய்தும்
வடிவென்பேன் நக்கீரன் கம்பன் வல்ல
புகழேந்தி ஔவையும் பாரதி அருளிய
மொழியென்றன் தமிழென்பேன்

இளங்கோவின் சிலப்பதிகாரமும் சிறப்புடன்
தொடரும் மாண்புறு மணிமேகலையும்
உலகெலாம் பொதுவாகி யாதுமே ஜெகமாகி
யாவர்க்குமான திருக்குறளதுவை தந்த

எம்மொழியின் சுவையென்னவென்பேன்
மேதினி பெற்ற முதல் மொழி ஆதியாய்
ஆண்ட அழகு மொழி பாலினை ஒத்த
வெள்ளை மொழி பாமரன் வாயின்

வண்ணமொழி மெல்லினத்தில் அம்மா
வல்லினத்தில் ஆன அப்பா உயிர்
பெரியளவில் பிணைந்த அழகு வேறு
உண்டோ வவனி மீது அன்பிலேகி

வழிந்த மொழி கனவிலேகி நடந்த மொழி
முத்தமிழைக் கொண்ட மொழி முனிவிலா
வெங்கள் மொழி வாழ வேண்டுமென்றும்
வாழ வேண்டுந்தமிழ் வாழ்க வாழ்க நாளும்

**கவிதுராஜ் கலைமதி**
**கலைப்பிரிவு(2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுதினமும் (GPS)

உலகத்தின் கண்கள் குருடாகி விட்டன. காதுகள் செவிடாகி விட்டன. சில ஜோடி கண்களை தவிர நடவடிக்கைகளையும் நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. மனிதன் உள்ளிட்ட அத்தனை ஜீவராசிகளையும் காப்பாற்றி ஆக வேண்டிய கடமை வேறு இருக்கிறது. கண்களும் காதுகளும் சோரம் போகாத ஒரு சிலர் அந்த பொறுப்பை ஏற்க வேண்டிய கட்டாயம். ஆலயம் தோறும் வேப்பிலையடித்து கடவுளை அழைக்க முடியுமா? இல்லை அவசரத்தில் அத்தனை கோயில்களிலும் ஏறி இறங்கத்தான் முடியுமா? என்ன செய்யப் போகிறது உலகம் என்று தலையை கசக்கிய போது மனித மூளையில் உற்பத்தியானது புீளு புவியிடம் காட்டி, உலக இடைநிலை உணர்வி, தடங்காட்டி என தமிழ் இதற்கு நாமகரணம் சூட்டி உள்ளது. ஆவேசம் அகலாத போராளிக்கு உளவாளியாக திக்குத் தெரியாமல் திகைப்பவனிற்கு வழிகாட்டியாக GPS பயன்படுகிறது. மின்காந்த அலைகளை வாங்கியும் செலுத்தியும் செயற்கை கோள்கள் உதவியுடன் தகவல்களை இறக்குமதி செய்யும் ஒரு விஞ்ஞான வர்த்தக முதலாளி இது.

உலக வல்லரசுகளையெல்லாம் உருவாக்கிய GPS தொழிநுட்ப உலகின் மூன்றாவது கண். பதுங்கு புலிகளையும், மொட்டை மாடியில் காயப்போட்ட துணியின் அழுக்கையும் கூட இது துல்லியமாய் சொல்லிவிடும். இரகசியத்தை அம்பலப்படுத்தும் அச்சத்தையும் அதேநேரம் அத்தியவசிய தேவையாக மாறி இருக்கின்ற GPS என்ற சமாச்சாரத்தின் சுவாரஷ்யமான தகவல்கள் வியப்பில் ஆழ்த்தி உள்ளன.

**1.** நிலத்தில் வாகனங்களின் போக்குவரத்து நெரிசில் இருப்பது போல் ஆகாயத்திலும் அறிவியல் ஆக்கங்களின் நெருக்கடி உள்ளது. அந்தரத்தில் வரிசர்வ செயற்கை கோள்கள் உட்பட மொத்தம் **31** செயற்கை கோள்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஏதாவது ஒரு செயற்கைக்கோள் வலுவிழக்கும் போது பைரன்னராக செயல்பட ரிசர்வ் செயற்கைகோள் உள்ளது. அதில் **24** GPS செயற்கைக்கோள்களும் கண்களைக் கசக்கிக்கொண்டு கண்காணித்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு **12** மணிநேரத்துக்கு ஒரு முறை பூமியின் சுற்றுவட்டப்பாதையில் இது சுற்றிச் சுழலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அமெரிக்கா தன் ராணுவ நடவடிக்கைகளுக்காக GPS முதன் முதலில் பயன்படுத்தியது GPS இன் அறிமுகம் உலகளாவிய பனிப்போர்களுக்கு உந்துதலாகவும் மாறியது.

3. ராணுவத்துக்கு உளவு பார்க்க மட்டும் தான் GPSஐ பயன்படுத்த முடியுமா என்ன என்ற ஆதங்கம் இருந்தது. 1996ம் ஆண்டு GPS உலகத்தின் சாலைகளிலும் ஓடியது. திசைகாட்டுவதற்காக வாகனங்களில் முதன்முதலில் பயன்பட்டது.

4. மிகவும் பிரபலமான ப்ளூ காலணிகள் சந்தையில் இப்போது விற்பனைக்கு வந்துள்ளன. இது பொதுமக்களின் பேசுபொருளாக மாறி இருக்கின்றது. ஏனென்றால் அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டவர்களை குறி வைத்து இந்தக் காலணிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு மனிதனின் அனுதின வாழ்க்கையில் ப்ளூ இன்றியமையாத ஒன்றாக மாறி அவனின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் காரணமாக இது அமைகின்றது.

**சு.ஏஞ்சல்**
**கலைப்பிரிவு 2020**

## சிந்தனைக்குச் சில

பிறருக்கு நன்மை செய்ய பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு

உனது எதிரியை அச்சுறுத்தும் வலுவான ஆயுதங்கள் உன் மௌனமும் பொறுமையும் தான்

மற்றவர்களை கீழே தள்ளிவிட்டு நீ மட்டும் ஏணியில் ஏற முயற்சிக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பு உன் உடன் பிறப்பு

பிறந்ததும் குழந்தை அழுவது
பசியினால் அல்ல
என்றோ ஒரு நாள்
இறப்பதை எண்ணியே...!

குழந்தைக்கு பாலூட்டி
ஆராரோ என தொட்டிலாட்டி
அமுதத்தை தினமூட்டி
வளர்த்தாயே என்றோ ஒருநாள்
மரணம் எம் இருவரையும் தாக்கும்

நீ நடக்கும் போது
உன்னை பின் தொடர்வது
உன் நிழல் அல்ல
அது மரண தேவனையின் மறு உருவம்...!

நீ பிறந்தது முதல்
உன்னுள் அடித்துக் கொண்டிருக்கும்
லப் டப் ஓசைகள்
உன்னை எதிர் கொள்ள காத்திருக்கும் மரணத்தின் சமிஞ்சைகள்

இரவானால் உன் கண்கள்
தானாய் மூடிக் கொள்கின்றனவே
அது நித்திரை அல்ல
உன் மரணத்தின் சிறு வடிவம்

ஒவ்வொரு வருடமும் அதிகரிப்பது
உன் வயது அல்ல!
அது உன் மரண வீட்டை நீ அடைவதற்கு
கடந்து வந்த மைல் கற்கள்...!

மனிதா! நீயோ
மரணத்தை மறந்து வாழ்கின்றாய்!
மரணமோ உன்னை அணைக்கத் தொடர்கின்றது!
ஆமாம் விரைந்து தொடர்கின்றது...!

**ஆ.ஜனனி**
**2020 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத பள்ளி நாட்கள்

தந்தை கரம் பிடித்துப் பள்ளி
சென்ற நாட்கள்
ஐந்தாம் ஆண்டில்
புலமை பரீட்சையில்

சித்தி பெற்ற நாட்கள்
அன்பு மாணவ மாணவிகளோடு
ஓடி விளையாடிய
நாட்கள்

பள்ளிப் பரீட்சையில்
முதலிடம் பிடிக்க
விழித்திருந்து படித்த நாட்கள்
கல்விப் பொது சாதாரண தரத்தில்

வெற்றி பெற்ற நாட்கள்
கல்வி உயர்தரத்தில்
உயர்வடைந்த நாட்கள்
பாடசாலை வாழ்க்கைக்கு

பிரியா விடை கொடுத்த போது
அழுத நாட்கள் மொத்தத்தில்
என் பள்ளி வாழ்க்கையை
எப்படி மறப்பேன்?

**நிலக்ஷிகா லோகநாதன்**
**2020 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவறையில் இருந்து கல்லறை வரை....

என் விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகள் உறங்கிட
இம்சையை இரசித்திட

வெற்றியில் களித்திட
தோல்வியில் துவண்டிட
முத்தத்தில் மகிழ்ந்திட
சித்தத்தை செதுக்கிட

உதிரத்தை துடைத்திட
உயிருடன் கலந்திட
இன்னலைக் களைத்திட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட

இனிய தேவதை நீ....
அம்மா
உனக்கு நான் பட்ட கடனதை
எத்தனை பிறவி எடுத்தும்

தீர்க்க முடியாத நிலையில்
ஒன்று மட்டும்
உறுதி செய்கின்றேன்
உன் உயிர்த்துளியாகக் கருதி

எனக்கு நீ ஆற்றியவைகளை
மறந்திடும் நாளொன்றில்
இந்த மகளுக்கு
இவ்வுலகம் வைத்திடும்
பெயர் பிணம்!!!

**கி.வேணுஜா**
**2020 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு விருந்து

01. உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய நாடு
இந்தோனேசியா

02. உலகின் சக்கரை கிண்ணம் என அழைக்கப்படும் நாடு?
கியூபா

03. நைல் நதியின் கொடை என அழைக்கப்படும் நாடு
எகிப்து

04. உலகின் அதிகளவு பெற்றோலியத்தை அகழ்ந்து எடுக்கும் நாடு?
சவுதி அரேபியா

05. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு?
இந்தியா

06. உலகின் அதிக மக்கள் தொகையை கொண்ட நாடு?
சீனா

07. கிழக்காசியாவில் அதிகளவு குடிச்செறிவான நாடு?
தாய்வான்

08. உலகின் நீண்ட கடற்கரையை கொண்ட நாடு?
சில்லி

09. தென் அமெரிக்கா கண்டத்தில் அபிவிருத்தி அடைந்த நாடு?
ஆஜென்ரினா

10. தென் அமெரிக்கா கண்டத்தில் கடற்கரையை கொண்டிராத நாடு?
மொலிவியா

11. சார்க் அமைப்பின் தலைமைபீடம் அமைந்துள்ள நாடு?
நியூயோர்க்

12. உலக சுற்றுலா ஸ்தாபனத்தின் தலைமைப்பீடம் அமைந்துள்ள நாடு?
ஸ்பெயின் (மற்றிக்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. 2019ம் ஆண்டில் சுதந்திரமாக சுற்றுலா செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நாடு?

இலங்கை

14. பசுமை புரட்சி ஆரம்பமான நாடு

மெக்சிக்கோ

15. உலகத்தின் கூரை என அழைக்கப்படுவது

திபெத் (பமீர் முடிச்சு)

16. சூரியன் உதிக்கும் நாடு

ஜப்பான்

17. ரோபோக்களின் வீடு என அழைக்கப்படும் நாடு

ஜப்பான்

18. காகிதவீடு என அழைக்கப்படும் நாடு?

பின்லாந்து

19. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு?

நோர்வே

20. ஆயிரம் வரிவிகளின் நாடு?

பின்லாந்து

21. ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்படும் நாடு

துருக்கி

22. மரகதத்தீவு என அழைக்கப்படும் நாடு

அயர்லாந்து

23. பொற்கோபுர நாடு

மியன்மார் (பர்மா)

24. அதிகாலை அமைதி நாடு

கொரியா

25. கிழக்கு திசையின் முத்து எனப்படும் நாடு

சிங்கப்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இந்தியாவின் நுழைவாயில்
மும்பை

27. புனிதநாடு
பாலஸ்தீனம்

28. அமைதி நகரம் எனப்படும் நாடு
ஜெருசலேம்

29. மனித குலத்தின் தொட்டில் என அழைக்கப்படும் நாடு
கென்யா

30. ஆசியாவின் வைரம் எனப்படும் நாடு
இலங்கை

31. உலகத்தின் நுழைவாயில்
வன்கூவர் (கனடா)

32. உலகத்தின் கோப்பி கிண்ணம் எனப்படும் நாடு
பிரேசில்

33. கடல் மட்டத்தின் கீழே உள்ள நாடு
நெதர்லாந்து

34. உலகில் அதிகளவு சாலைகள் உள்ள நாடு?
அமெரிக்கா

**பபிலா கணேசமூர்த்தி**
**கலைப்பிரிவு (2020)**

## சிந்தனைக்குச் சில

தமக்கு நல்லது என்று கருதாததை பிறருக்குச் செய்யாமல் இருப்பவரே சான்றோர் ஆவார்

ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதமளிக்கும் ஒரு நல்ல மேலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி வாழ்க்கை

தேனைச் சுற்றிய வண்டுகளாய்
ஒன்றாய் சேர்ந்த பட்டாம் பூச்சிகளாய்
வாழ்வின் இன்ப துன்பங்களோடு
நட்புகளுடன் சுற்றி திரிந்தோம்

அன்றொரு நாள் வகுப்பறையில்
நானும் நண்பியும்
செல்லச் சண்டை போட்ட நாட்கள்
அழகான இன்பமான நாட்கள்

அத்தனையும் சொற்ப நேரத்தில்
மறந்து விடுமோ? என்ற ஓர் ஏக்கம்
பள்ளி வளாகத்திலேயே எல்லோருமாய்
போற்றுகின்ற அழவில்லாதது எம் நட்பு

அறுபது ஆண்டு கடந்த எம்
பள்ளியிலே கல்வியை மட்டும் நாம்
கற்கவில்லை அன்பையும் கற்றோம்
ஒழுக்கத்தையும் கற்றோம் இது நம் பள்ளி

கல்லூரி தாயே மீண்டும் மீண்டும்
எம்மை பெற்றெடுப்பாயாக
உனது கரங்களில் மழலை மொழி பேசி
தவழ்கின்றோம் பெற்றெடுப்பாயா?

கவிதை எழுதியும் முடியவில்லை
கண்ணீர் சிந்தியும் முடியவில்லை
ஞாபகங்களை மறக்கவும் முடியவில்லை
என்றும் எம் மனதில் கல்லூரி வாழ்க்கை

**சு.தேனுஜா**

**கலைப்பிரிவு (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்த்தமுள்ள இயற்கை

வாழ்க்கை சுமையானாலும்
ஆசைகளை அவிழ்ந்து விடாதிருக்கும்
மனிதர்கள் போல் அல்லாமல்
கோடை சுமையினால்

இலைகளை அவிழ்த்து விடுகிறது மரம்
கடவுளை வணங்கி கொண்டிருக்காமல்
உணவை தேடிக்கொண்டிருக்கின்றது.
பிள்ளையாரை சுற்றிக் கொண்டிருக்கும் எறும்புகள்

புல்லையும் மாட்டையும் சேர்த்து
தானே சாப்பிட வேண்டும் என்று சிங்கங்கள் நினைப்பதில்லை
மாங்கனிகளை சுவைக்க வரும் கிளிகளை
மாமரங்கள் கூட விரட்டியடிப்பதில்லை

குயில்கள் தங்கள் மொழியில் தான்
இனி கூவ வேண்டும் என்று மயில்கள் ஆணையிடுவதில்லை
மனிதர்கள் சேர்வதை எந்த விலங்கும் எட்டிப்பார்ப்பதில்லை
முழு பறவையில்லை என்பதற்காக வானத்தில் பறக்க

வௌவால்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதில்லை
இறந்த காகம் பணக்காரனா நடிகரா பாமரனா
என்று பார்த்து காக்கைகள் கூடுவதில்லை
எனவே மனிதனை விட இயற்கை அர்த்தமுள்ளது தான்

**இ.வேணுஷா**
**கலைப்பிரிவு [2020]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

நீலக்கடலும் வண்ண ரிசியும்
வந்தெம்மைத் தாலாட்ட
நாளும் நுழையும்
அவலம் - அக்கணமே
கலைந்து விடும்.

கானக் குயிலின் ஓசை எங்கும்
ஆசை மனதில் சிறகசைக்க
வீசி வரும் தென்றல் மேதினி எங்கிலும்
நேச நினைவை நனைத்துச் செல்லும்

ஓடுகின்ற மேகங்கள் ஒவ்வொன்றும் பற்பல
கதைகள் சொல்ல கனவு வானாய்
விரிந்துருகி நாளும் நெஞ்சம்
கவிதை பாடும்

கற்பனை எங்கும் விற்பனையானால்
விண்ணும் மண்ணும் விரகம் கொள்ளும்
ஆழ்கடலில் நாவாய் போல நினைவின் கடலில்
கவிஞன் பிறப்பான் கவிதை சமைப்பான்

**விஜியரட்ணம் வினோதினி**
**கலைப்பிரிவு (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# E.S.P சக்தி

நவீன விஞ்ஞானிகளிடம் மூளை தொடர்பாகவும் அதன் இயக்கம் தொடர்பாகவும் இன்று வரை பல கேள்விகள் விடை இல்லாமல் உள்ளன. மனித மூளை வலது மூளை, இடது மூளை என்று இரண்டாகப் பிரித்து மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் கையாள்வார்கள். வலது மூளைக்கும் இடது மூளைக்கும் இடையில் ஒரு பகுதியுண்டு. இதுவரை அதன் செயற்பாடு என்ன என்பதனை மருத்துவ, விஞ்ஞானிகளால் உறுதிப்படுத்தி கூற முடியவில்லை.

இப்பகுதியிலே எலிகளுக்கு மின் அதிர்வைக் கொடுத்து பரிசோதித்தார்கள் E.S.P சக்தியை குறிப்பிட்ட மனிதர்களிடம் தூண்டுவது இந்த பகுதியாக இருக்கலாம் என்று E.SP ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் ஏன் அந்த பகுதி அனைவருக்கும் தூண்டப்படவில்லை என்பது இன்று வரை அறியப்படவில்லை. அந்தப் பகுதியை செயற்கையாகத் தூண்டும் போது மனிதர்களிடம் இறப்பு ஏற்படலாம் என்பதால் அவ் ஆராய்ச்சிக்கு இன்று வரை வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்த குறிப்பிட்ட பகுதியானது நெற்றிப் பொட்டிற்கு நேராக அமைந்துள்ளது. சிவன் தொடர்பாக பேசும்போது சிவனின் உருவத்தை காட்டும்போதே நெற்றியில் மூன்றாவது கண் இருப்பது போன்று காட்டப்படுகின்றது. மேலும் அந்த மூன்றாவது கண்ணைக் கொண்டு சிவன் பல சாகசங்களை நிகழ்த்தி உள்ளதாக புராணங்களில் காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாக நெற்றிக்கண் பொறிமூலம் முருகன் பிறந்தது இதற்கு சான்றாகும். புராணங்கள் என்பது திரிவுபடுத்தப்பட்ட எங்களுடைய பண்டைய வரலாறு என்ற ரீதியில் ஆதாரங்களுடன் எழுதப்பட்ட நூல்களாக கருதப்படுகிறது. அந்த வகையில் பார்த்தால் சிவன் என்பவர் ஓர் E.S.P மனிதராக இருக்கக்கூடும் அவரின் E.S.P சக்தியை குறிப்பிடுவதற்காகவே நெற்றியில் கண் இருப்பது போன்று காட்டப்பட்டிருக்கலாம்.

சாதாரண மனிதர்களில் அபார E.S.P சக்தியுடன் வித்தியாசமாக இருந்த சிவன் காலப்போக்கில் கடவுள் புகழை எய்தியிருக்க வாய்ப்புண்டு. E.S.P சக்தி மற்றும் ஏனைய பல அறிவியல் சார்ந்து முன்னேறிய சமுதாயமே எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் என கருதப்படுகின்றது. மேலும் புராணங்களில் குறிப்பிடப்பட்டது போல் சிவனுடன் தொடர்புடைய அனைவருமே ஏதோ ஒரு வகையில் மனிதர்களிடம் இருந்து வித்தியாசமானவர்களாக கருதப்படுகின்றனர். அவர்கள் தியானம் செய்பவர்களாகவும் அபார திறமைகள் கொண்டவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

இதனை ஒப்பீட்டு நோக்கும் இடத்து சிவன் மட்டுமன்றி அவருடன் தொடர்புடைய அனைவருக்குமே E.S.P சக்தி இருப்பதாக கருதப்படுகின்றது. தற்போதைய உலகில் E.S.P சக்தி என்பது சில மனிதர்களிடம் தானாக வரும் ஒரு வித விசேட மர்ம சக்தியாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் சிவன் மற்றும் அவர் தொடர்பானவர்களுடன் பார்க்குமிடத்து தியானம், பயிற்சி மூலமாகவே சக்தியை பெற முடியும் என்ற வகையிலேயே அமைந்துள்ளது.

ஆகவே தியானத்தின் மூலம் நாம் எமது மூளையின் நடுவில் இருக்கும் அந்த E.S.P சக்தியினை இயக்க முடியும் என்று விஞ்ஞானிகள் மற்றும் அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இதன் மூலமாகவே சிவபெருமான் எப்படி E.S.P உடன் தொடர்புபட்டிருப்பார் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. அத்தோடு தியானத்தின் மூலமாக E.S.P சக்தியை பெற்று கொள்ளலாம் என நம்பப்படுகிறது.

**சண்முகம் கீர்த்தனா**
**தரம் 12**
**உயிரியல் பிரிவு**

## சிந்தனைக்குச் சில

அறிவுள்ள மனிதர்களுடன் உரையாடு. அறிவில்லாத மனிதர்களோடு உறவாடு. ஆனால் பண்பில்லாதவனைக் கண்டால் ஒதுங்கீடு

ஒரு வினாடியில் நாம் செய்யும் தவறு வாழ்க்கை முழுவதும் வேதனையைத் தேடித் தருகிறது

அயலவனை நேசி அற்காக அவனையும் உன்னையும் பிரித்து வைக்கும் வேலியை பிடுங்கி விடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர்களை மதியுங்கள்!

ஓர் ஆசிரியருக்கு தான் பெறும் ஊதியத்தை விட தன்மானம் மிக முக்கியமானதாகும். மாணவர்களிடமிருந்து ஆசிரியப் பெருமக்கள் மரியாதையைத் தவிர வேறு எதையும் எதிர்பார்ப்பதில்லை. நம் நாட்டில் இப்போது தவறு செய்யும் மாணவர்களைத் திட்டவோ கண்டிக்கவோ முடியாத நிலை உள்ளது. அமெரிக்காவிலோ வகுப்பறைக்கு மாணவர்கள் துப்பாக்கியும் கையுமாக வருகிறார்கள். அது அவர்கள் வளர்ந்த சூழல் கலாசாரம் அப்படிப்பட்டதாக அமைந்திருக்கலாம். ஆனால் நம் நாட்டில் ஏணிப்படி? இந்தச் சூழலில் எந்த ஆசிரியருக்குத் தான் தப்பு செய்யும் மாணவர்களைத் தட்டி கேட்கும் துணிவு வரும்? வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்தும் போது மாணவர்களின் நிலை எப்படி இருக்க வேண்டும் என்பதை திருவள்ளுவர் அருமையாகச் சொல்வார். இருப்பவர் முன் பணிவாக நின்று இல்லாதவர் எப்படி யாசிப்பார்களோ அப்படி பணிவுடன் வகுப்பறையில் இருந்த ஆசிரியரிடம் மாணவர்கள் கற்க வேண்டும் என்பது குறள் கருத்தாகும். அப்படிக்கற்றாரே கற்றவர் மற்றவரெல்லாம் கடையர் என்று கூறுகிறார் வள்ளுவர்.

**"உடையார் முன் இல்லார் போல் எக்கற்றும் கற்றார்**
**கடயரே கல்லாதவர்"**

என்பது குறள் பாடுபொருளை உணரும் ஆர்வத்தோடு கேட்க விரும்பும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவது என்பது வளரும் நிலையில் உள்ள செடிகள் நிரம்பிய பாத்தியில் நீர் பாய்ச்சுவதற்கு சமம் என்று மேலும் கூறுவர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பவனந்தி முனிவர் தான் இயற்றிய நன்னூல் என்னும் இலக்கண நூலில் ஒரு மாணவன் வகுப்பில் எப்படி பாடம் கேட்க வேண்டும் என்பதை ஒரு நூற்பாவில் விளக்கியுள்ளார். உரிய நேரத்தில் வகுப்பறையில் இருத்தல் வேண்டும். ஆசிரியர் வரும் போது எழுந்து பணிந்து நின்று வழிபட வேண்டும். அவர் அமரச் சொன்னதும் ஓவியர் வரைந்த பாவையைப் போல வகுப்பில் அமர வேண்டும். செவி இரண்டும் வாய்களாக மாறி ஆசிரியர் கூறுவதைத் தாகம் ஏற்படும் போது பருகும் ஆர்வத்தினர் ஆகிப்பருக வேண்டும்.

இவற்றைத் தவராமல் நம் உள்ளத்தில் பதிய வேண்டும். இப்படி பாடம் கேட்பவனுக்கு இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள். ஆனால் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் நிலை அப்படியாக இருக்கிறது? குருவின் பெயரைச் சொல்லி குருவைக் கண்டு குருவின் சொல் கேட்டலே பாடப் பொருளில் தெளிவு பெறுவதற்குரிய வழியாகும் என்று உரைத்த திருமூலரும் தமிழரே.

**"தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"**

என்பது திருமூலரின் மந்திரம் ஆனால் நமது நாட்டில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் மாணவர்களால் அரங்கேற்றப்படும் வன்முறைகளுக்கு அளவே இல்லை. மாணவர்கள் ஆசிரியருக்கு அடிப்பதும் கண்டிக்கும் ஆசிரியைகளைப் பற்றி கண்டபடி தூற்றுவதும் இன்று சர்வசாதரணம் என்றாகி விட்டது.

வகுப்பறை வன்முறை என்பது அம்பு விடுவதில் தொடங்கி ஆளை அடிப்பது வரை நீள்கிறது. ஆசிரியர்களுக்கு சகிப்பு தன்மை வேண்டும் என்று ஒரு தரப்பினர் உரக்கப் பேசுகிறார்கள். சகிப்புத் தன்மைக்கு ஓர் எல்லை உண்டல்லவா? கட்டுப்பாடும் ஒழுக்கமும் இல்லாத சிலரால் மற்ற மாணவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட மாணவர்களைக் கல்லூரி நிர்வாகமும் கண்டு கொள்வதில்லை போலும். இந்த நிலை நீடித்தால் அறிவாற்றல் மிகுந்த எவரும் ஆசிரியப் பணிக்கு வரமாட்டார்கள். பிற பணிகளுக்குச் சென்று விடுவார்கள். ஓர் ஆசிரியருக்கு தான்பெறும் ஊதியத்தை விட தன்மானம் மிக முக்கியமானதாகும். மாணவர்களிடம் இருந்து ஆசிரியப் பெருமக்கள் மரியாதையைத் தவிர வேறு எதையும் எதிர்பார்ப்பதில்லை. மாணவர்கள் இதை உணரவேண்டும் உணர்த்த வேண்டிய பொறுப்பில் இருப்போர் உணர்த்த வேண்டும்.

**சுரேஸ்குமார் ஜீவிகா**
**கலைப்பிரிவு (2020)**

## சிந்தனைக்குச் சில

யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் நீ திருந்திக் கொள்
பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு

உட்பகையை விட வெளிப்படையாகக் கடிந்து கொள்வது நல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாசம்

தானாடா விட்டாலும் தசையாடும் என்பதன்
தனிப்பொருள் பாசமே - அந்த
ஊராடும் அளவிற்கு உள்ளத்தில் உறைந்து
உள்ளது பாசமே
வானெட்டும் தூரம் வரை வசதிகள் படைத்தாலும்
மாறாது பாசமே - அது
தான் கெட்டுப் போனாலும் தன்பாசம் கொண்டார்க்கு
போடாது வேசமே.

ஆயிரம் ஆயிரம் உறவுகள் பாசத்தை
அள்ளி இறைத்தாலும் - யாரும்
வாயின் வார்த்தையால் பாசம் எனும் சொல்லை
பலமுறை உரைத்தாலும்
கோயில் குளமென்று நேர்த்திக்காய் நிதிகோடி
கொட்டிக் குவித்தாலும் - ஒரு
தாயின் பாசத்திற்கு இணையாகுமோ இந்த
பூமியை வைத்தாலும்

கண்ணையும் மணியையும் காப்பது - இந்த
இமையதன் பாசமே - எம்
மண்ணையும் வளத்தையும் காப்பது மழை தரும்
மேகத்தின் பாசமே
விண்ணையும் மிஞ்சிடும் விசாலமானதொரு
உன்னத பாசமே - அது
உன்னையும் என்னையும் உலகிற்கு தந்த - எம்
அன்னையின் பாசமே.

ஒவ்வொரு உயிர்களும் சிக்குண்டு தவிப்பது
பாசத்தின் சிறையிலே - அண்ணன்
தங்கையின் பாசம் தமக்கென துணைதேடி
சென்றிடும் வரையிலே
சொந்தமும் சுற்றமும் உன் பணம் பொருள்களை
சுகித்திடும் வரையிலே - இரத்த
பந்தம் இணைந்த தாய்ப் பாசத்திற்கு ஈரெழு
உலகமும் நிகரில்லையே.

**சு.பானுசன்**
**தொழில்நுட்பவியல் [2020]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொ(ல்)லைபேசி

எங்கிருந்து வந்ததோ
ஏதும் யார் அறியார் - எனினும்
எல்லாரும் கொஞ்சி மகிழ்ந்திடுவார்
தடுக்கைகளில் புரளும்

தவளாத குழந்தையும்
படுக்கை விட்டு எழ
பாடுபடும் இளைஞனும்
தவறாது கை பற்றும்
தங்கமில்லாத நாயகி

இடுப்பெலும்பில் விறைப்பில்லா பழசுகளுக்கும்
இளசுகளை மனசில் இரவல் வாங்கும் இளவல்களுக்கும்
இங்கிதமாய் ஒலித்திடும் இவள் குரல்
இத்தனைக்கும் இவள் ஒரு இயந்திர நாயகி

கணக்குப் பார்க்க
கலியாணப் பலன் பார்க்க
பெற்றதுகள் பிறந்ததுகள்
கட்டினது கை கழுவி விட்டது
இத்தனையை கணப் பொழுதில்
காட்டிடும் பெரும்
கைங்காரியவள்

எத்தனையோ பலன்
இவளுக்கிருப்பினும்
சிணுங்கிய சில பொழுதினுள்
சிதறடித்திடும் வாழ்வினை
கைபட்டதும் காட்டிடும் பல
காட்சிகள் கண்டவர்
நெஞ்சினில் கறை படிந்த
காரியம் உதித்திடும்
இத்தனைக்கும் நடுவினிலும்
ஒய்யாரமாய் என்னவள்
என்றும் நினைவுடன் - இவள்
உறைந்திடுவாள்.

**சி.தாட்சாயினி**
**வர்த்தகப்பிரி வு (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்தெழு பெண்ணினமே!

நட்பாய், காதலாய்
வீரமாய், பக்தியாய்
சாதனையாய் சரித்திரமாய்
ஆண்டாண்டு காலமாய்
அரியாசனத்தில் எங்கள்
பெண்ணினம்...

அதியமானிடம்
நெல்லிக்கனி பெற்று
அரச - புலவர் நட்பிற்கு வித்திட்ட
தங்கக் கிழவி
ஔவையின் வழித்தோன்றல் நாம்

நாடு கடத்தியும்
இராவணனிடம் தன்னை
இழக்காத சீதையின்
வரலாறுகளும் இங்கே
வாள் ஏந்தி
வரலாறு படைத்த
ஜான்சிராணியின்
தங்கைகள் நாம்

கற்புக்கு அரசி
கண்ணகியின்
பக்தர்கள் நாம்
பெண்ணினை நிலவென்பார்
அந்த நிலவையே சுற்றிய
பெண் எங்கள் கல்பனா...

பத்திரிகைகளில் செய்தி
கல்லூரிப் பெண்கள்
கருமுட்டை விற்கிறார்கள்
காலிமதுப் புட்டில்கள்
பெண்கள் விடுதியில் உருள்கிறது
கன்னியின் கற்பு இன்று
கைபேசியில் விற்கப்படுகிறது - என்பது

கழுத்தில் நஞ்சணிந்து
கரங்களில் ஆயுதமேந்தி
தளபதியாய் தமிழிச்சிகள்
இருந்த எங்கள் ஊரில்
நாகரீகம் என்ற பெயரில்
ஆபாச உடைகள் அணியலாமா?
பார்ட்டி (யசவல) என்ற பெயரில்
பாவச்செயல்கள் செய்யலாமா?

விழித்தெழு பெண்ணினமே
வீறுகொண்டு எழுந்துவா
மீண்டும் சரித்திரங்கள் படைப்போம்
சாதனைகள் புரிவோம்
நட்புடன் நிலா...

**சுப்பிரமணியம் கஜனி**
**கலைப்பிரிவு [2020]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் கல்லூரித் தடங்கள்

பள்ளிப் பருவமிதாம் துள்ளித் திரிந்திடும்
இனிமையான காலமிதாம் என்றும்
சுமந்திடும் அழகிய நினைவுதனை
அழியாத நினைவாக எம்மத்தியில்
தொடர்ந்திடச் செய்திடும் பள்ளிக் காலமிதாம்

வகுப்பறைக் கல்விதனை விளையாட்டாக
மகிழ்ச்சியுடன் கதைபேசி கழித்திடுவோம் - எனினும்
நாம் செய்த தவறதனை உணர்ந்திடுவோம்
பரீட்சை பெறுபேற்றின் முடிவுதனில்
உணர்வதனால் உயர்ந்திடுவோம் என்றுமே

குறும்புகள் செய்திடினும் கண்டிப்புடன் என்றும்
வரவேற்கும் ஆசிரியர் குழாம்
சண்டை போட்டு பிரிந்து சென்றாலும்
மீண்டும் வந்து பேசிடும் நண்பர் குழாம்
அனைத்தும் பள்ளிக் காலம் தந்த வரமாகும்.

பள்ளி விடுமுறையை எண்ணிப் பார்த்திடுவோம்
விடுமுறைதனை கொண்டாடுவதற்காக அல்ல
மீண்டும் பள்ளி தொடங்கிடும் நாளை எதிர்பார்த்தே
அனைத்தும் பள்ளிக்காலம் தந்திடும்
அழகான நினைவலைகளாய் என்றுமே.

விடுமுறைக் காலமதில் உணர்ந்திடுவோம்
பள்ளிக் காலத்தின் பிரிவுதனை
நட்புடன் பழகிய நண்பர்கள் மட்டுமல்ல
ஆசானின் அன்பான அரவணைப்பும் - கூடவே
உணர்வதனால் புரிந்திடுவோம் பள்ளிக் காலத்தின் வலியதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவென்ற ஒன்றை தந்திடும் ரணங்கள்
நாம் சுமந்திடும் வலிகள் எண்ணிலா - என்றும்
புரியாத புதிர்தனை உணர்ந்திட்டால் குறைத்து
பள்ளிக் காலமதை சிறப்பாக கழித்திடுவோம்

இன்றைய இயந்திர வாழ்க்கையில்
நட்பையும் உறவுகளையும்
தொலைத்து வந்தாலும் - ஏதோ
ஒருசில நினைவுகள் நிகழ்வுகள்
எல்லாம் தொலைத்த நட்புகளை கூட
என்றும் நினைவுபடுத்திக் கொண்டு நான் இருக்கின்றேன்

என் கல்லூரி நினைவுகளை
சுமந்து தான் செல்கிறேன் நல்ல
நண்பர்களையும் அழகான
நினைவுகளை நினைவுபடுத்தும்
என் கல்லூரி எனக்குத் தந்த
மாபெரும் பொக்கிஷம்...

**நா.யதுஷன்**
**வர்த்தகப்பிரிவு (2019)**

## பொன்மொழிகள்

உன்னைத் தவிர வேறு யாரும் உனக்கு அமைதியைத் தர முடியாது
-ரால்ப் வால்டோ எமெர்சன்-

அடக்கமே அறிவுடைமையின் சிறந்த அடையாளம்
-ஜெர்மிகாலியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலவேளை இப்படி நடக்கலாம்...

உலக வாழ்க்கையின்
ஒவ்வொரு நிமிடங்களும்
சுருங்கிக் கொண்டிருக்கின்றது

கர்ப்பம் தரிப்பதை விட
குளோனிங் கோட்பாட்டிற்கே
முன்னுரிமை...

இனி....
குழந்தைகளை சந்தைப்படுத்தும்
குழந்தை உற்பத்தி கம்பனிகள்

இருநூறு வருடங்கள்
உயிர் வாழ்
ஊடகங்கள் தேடப்படும்

செயற்கை தாவர அழகே...
சூழலுக்கு
தாவர உற்பத்தி குறையும்

ஒட்சிசன் குறைந்து
உயிர் கொல்லும்

காசுக்கு கடைகளில்
கடைசி விலையில்
ஒட்சிசன் விற்கப்படும்

ரோபோக்கள்
வாக்குரிமை கேட்கும்
இயந்திர ஆட்சி நடக்கும்
கணனியோடு மட்டுமே
பேச்சுக் கொடுப்பான் மனிதன்

மனிதத்துவம் மனிதநேயம் என்பன
மயானம் நோக்கி
பயணித்துக் கொண்டிருக்கும்

நிலம் குறையும்
பாதி பூமியை கடல் தின்னும்

வேற்று கிரகத்தில்
குடியுரிமை கோரப்படும்
அங்கேயும் எல்லை பிரச்சினை வரும்
துப்பாக்கிகள் மோதிக் கொள்ளும்
மனிதர்கள் சாவார்கள்

இதனால்...
சிலவேளை இப்படி நடக்கலாம்
மனித நாகரீகம்
மறுபடியும் மாண்டு போகலாம்.

**உ.விதுஷா**
**தரம் 12**
**தொழில்நுட்பபிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணையம் எப்படி இயங்குகின்றது?

கம்பியூட்டரில் இணைக்கப்பட்ட இணையமானது சவர்களையும் கிளையன்ட்ஸ்களையும் பயன்படுத்த உலகெங்கும் உள்ள டேட்டாவையும் தகவல்களையும் இடம்மாற்றுகிறது. ஒரு நெட்வேர்க்கில் மையப்படுத்தப்பட்ட சேகரிப்பு இடத்தை வழங்குவதன் மூலம் புரோகிராம்கள் மற்றும் தகவல்கள் போன்ற மூலாதாரத்தின் நிர்வாகத்திற்கான பொறுப்பை ஏற்கும் கம்பியூட்டர் சர்வர் எனப்படுகிறது.

சர்வரில் சேமிக்கப்பட்டுள்ள இடத்தில் இருக்கும் உள்ளடங்களை அணுகும் கம்பியூட்டர் "கிளையண்ட்" என்று அழைக்கப்படுகிறது. இணையத்தில் எண்ணற்ற ஃபைல்களையும், சேவைகளையும் அணுகக் கூடிய ஹோஸ்ட் கம்பியூட்டர் என்று கூறப்படுகிறது.

இணையத்தின் உள்ளமைப்பு, போக்குவரத்தின் அமைப்பை போன்றது. போக்குவரத்து அமைப்பில் அதிகப்படியான வணிக நடவடிக்கைகள் முக்கிய நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலை வழியாகக் கொண்டு செல்லப்படும். அதேபோல் இணையத்தில் சில முக்கிய தொடர்பியல் இணைப்புக்கள் மட்டும் அதிகப்படியான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்த தொடர்பியல் இணைப்புக்கள் மொத்தமாக இணையத்தின் பின்புலம் என்று கூறப்படுகிறது.

இணையம் ஒரு பாக்கெட் முறையிலான நெட்வேர்க் ஆகும். அப்படியென்றால் நீங்கள் இடம்மாற்றம் செய்யும் டேட்டாவானது பாக்கெட்களாக பிரிக்கப்படுகிறது. நீங்கள் டேட்டாவை பல்வேறு இணைய நெட்வேர்க் வழியாக நெட்வேர்க்குகள் இணைக்கப்பட்டுள்ளது.

உங்கள் பாக்கெட் (உங்கள் டேட்டா) எங்கு செல்கிறது என்பதனையும் எந்த திசையில் அனுப்ப வேண்டும் என்பதனையும் ரூட்டர் செக் செய்கிறது. ஒவ்வொரு ரூட்டரும் மற்ற ரூட்டருடன் இணைக்கப்படுவது சாத்தியமில்லை. அவை உங்கள் டேட்டா போக வேண்டிய திசையை மட்டும் தீர்மானிக்கின்றது. எனவே டேட்டா எங்கு செல்கிறது என்பதை ரூட்டர்கள் அறிந்திருந்தால் ஜீ (இன்டர்நெட் ப்ரோட்டோகால்) எனப்படும் சில வகையான முகவரி இருக்க வேண்டும். ஜீ உடன் இடம்மாறும் டேட்டா பாக்கெட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இது TCP(டிரான்ஸ்மிஷன் கண்ட்ரோல் ப்ரோட்டோக்கால்) எனப்படும். இன்னொரு ப்ரோட்டோக்கலால் கையாளப்படுகிறது. (அவைகள் வெறும் எண்கள் தான்)

மனிதர்கள் போல் அல்லாமல் கம்பியூட்டர்களுக்கு ஜீ முகவரிகளை கையாளுதல் சற்று எளிதாக இருக்கிறது. என்பது விரைவில் கண்டுபிடிக்கப்பட்டது. டொமெய்ன் பெயர் அமைப்பு 1984ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இணையத்தில் ஒரு நபரின் கணக்கிற்குண்டான இடம் டொமெய்ன் பெயர் ஆகும்.

**நா.நிரோஜினி**
**கலைப்பிரிவு (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சமுதாயத்தில் மாறிவரும் முதியோர் நிலை

இன்றைய உலகமானது பல வகையிலும் பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மனிதன் தன்னால் செய்ய இயலாத பல வேலைகளை இயந்திரங்களைக் கொண்டு செய்கின்றான். தனது நேரத்தை மீதப்படுத்துகின்றான். இவ்வாறு உலகம் வளர்ச்சியடைவதற்கு அத்திவாரம் இட்டு வளர்த்த முதியோர்களை மனிதன் மதிப்பதோ, கவனத்தில் கொள்வதோ இல்லை. அவர்களைப் பாதுகாப்பதும் இல்லை. இன்றைய சமுதாயத்தில் முதியோர்கள் பற்றிய பார்வையும் அணுகு முறையும் மாற்றமடைய வேண்டியதாக இருக்கிறது.

முதியோர்கள் வீட்டின் அரும்பெரும் அறிவுப் பெட்டகங்கள் அவர்களை பேண வேண்டியது அவசியம். அவர்களை முதியோர் காப்பகங்களில் சேர்த்து விட்டால் தம் சுமை தீர்ந்து விடும் என எண்ணுகின்றனர். இதற்கு உதாரணமாக ஒரு சிறு கதையை நோக்குவோம்.

ஓர் ஊரில் தாய் தனது சிறுவயது மகனைப் பாலூட்டிச் சீராட்டி கல்வி கற்பித்து சிறந்த ஆற்றல் உள்ளவனாக வளர்க்க இரவு பகலாக கஸ்ரப்பட்டு வேலை செய்து தனது அன்பு மகனை வளர்த்தார். மகன் வளர்ந்து பெரியவனான பின்னரும் தனது பிள்ளைக்கு பல அறிவுரைகளைக் கூறி தனது மகனை "கண்ணை இமை காப்பது" போல் வளர்த்து வந்தார்.

மகன் வளர்ந்து திருமணமானததும் தனது மனைவியின் சொல்லினைக் கேட்டு தன்னை அன்பாக வளர்த்த அன்னையை முதியோர் இல்லத்தில் விட்டு விடுவதற்காக அழைத்துச் சென்றான். இருவரும் ஓர் காட்டு வழியாக நடந்து சென்றனர். அப்படிச் செல்லும் போது அந்த அன்பு மிகுந்த அம்மா தனது சேலையைத் துண்டு துண்டாகக் கிழித்து பாதை வழியே போட்டுச் சென்றார்.

மகன் தனது அன்னையை முதியோர் இல்லத்தில் விட்ட பின்னர் திரும்பி வரும் போது அந்த அன்பு அம்மா மகனை அழைத்து மகனே நீ திரும்பிப் போகும் போது வழி தவறி செல்லக் கூடாது என்பதற்காக என்னுடைய சேலையைத் துண்டு துண்டாக க் கிழித்து பாதை வழியே போட்டு வந்துள்ளேன். நீ அதனைப் பார்த்து அவதானமாக வீடு செல் எனக் கூறினார். அந்த தாயின் மனதை பார்த்தீர்களா? நாகரீகம் என்ற சொல்லில் நசிந்து கிடக்கும் மனிதன் பெற்றோர்களைக் கூட மறந்து விடுகின்றான். தம்மைப் பாலூட்டி சீராட்டி வளர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பெற்றோரை அன்பாக ஆதரிக்காமல் உதவி செய்யாமல் அவர்களை பாரமாக நினைத்து அநாதைகளாக முதியோர் இல்லங்களிலும் மடங்களிலும் விட்டு விடுகின்றனர்.

"காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்" என்பதற்கிணங்க நாளை தமக்கும் இந்நிலை வரும் என்பதை ஏனோ மறந்து விடுகின்றனர். இன்று தமது பெற்றோரை வீட்டில் வைத்து பராமரிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பிள்ளைகள் தமது அந்தஸ்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் தமது மூதாதையரை மதிப்பதும் இல்லை.

"இரவும் பகலும் மாறி மாறி வருவதைப் போல் இளமையும் முதுமையும் மாறி மாறி வரும்" என்பதை இன்றைய இளைஞர்களான நாம் மறந்து விடக்கூடாது. முதியோர்களை எமது வீடுகளில் வைத்துப் பாதுகாக்க வேண்டியது எமது மிகப்பெரிய கடமையாகும். சிறுவயதில் எம்மை எவ்வாறு பேணிப் பாதுகாக்கின்றார்களோ அதே போன்று அவர்களை வயதான காலத்தில் குழந்தைகளைப் போல் பேணிப் பாதுகாப்பது எமது எல்லோருடைய தலையாய கடமையாகும்.

முதியோர்கள் என்பவர்கள் பல அனுபவங்ளை உடையவர்கள் அவர்கள் எம்மை ஒரு காலமும் தீய பாதையில் செல்ல வழி காட்ட மாட்டார்கள். நல்ல பல கருத்துக்களைக் கூறி எம்மை இவ்வுலகில் நல்லவர்களாக வாழ வைக்க விரும்புவார்கள். அவர்களுடைய கருத்துக்களை எம்மில் பலர் கேட்பதும் இல்லை, பின்பற்றுவதுமில்லை. "இதுகள் கிழடுகள் இவர்களுக்கு என்ன தெரியும்" என அவர்களை ஏளனம் செய்து விட்டு செல்வதைக் காண முடிகிறது.

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை, தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" என்பதற்கிணங்க எம்மை அன்பாக வளர்த்த எம்மை தாயை விட சிறந்த ஒரு கோயிலும் இல்லை. அதே போல் எவ்வளவு மந்திரங்கள் இருந்தாலும் தந்தையின் சொல்லினை வென்ற மந்திரம் ஒன்றுமே இல்லை. எமது பெற்றோர் வயோதிபராக மாறும் காலத்தில் அவர்களைப் பேணி காப்பது எமது மிகப்பெரிய கடமையாகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தூர இடங்களுக்கு அனுப்பி விட்டு இன்று தனிமையில் யாரும் அற்றவர்களாக வாழ்வதைக் காண முடிகிறது. பிள்ளைகள் பெற்றவர்களின் அருகில் இல்லாமை இருந்தும் கவனிக்காமை இன்று முதியோர் இல்லங்கள் தோன்றக் காரணமாயிற்று.

எங்கெல்லாம் ஒன்றின் முக்கியத்துவம் இல்லாமல் போகிறதோ அங்கெல்லாம் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருடத்தில் ஒருமுறை அவற்றை உலக தினமாக கொண்டாடுகின்றார்கள் எனப் பலர் வேடிக்கையாகக் கூறுவதைக் கூறுவதைக் காணலாம். அது உண்மை தான் என்று எண்ணத் தோன்றும் வகையிலே இன்றைய நவீன உலகம் மாறிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் நாம் சர்வதேச முதியோர் தினம் ஒக்டோபர் 01 சர்வதேச அன்னையர் தினம் மே 09 என பல தினங்களை நாம் கடமைக்காகவே கொண்டாடுகின்றோம் என்பது உண்மை நிலையாகும். இந்நிலை மாற வேண்டும். முதியோர் இல்லங்கள் இல்லாததாக வேண்டும். பிள்ளைகளோடு பெற்றோர் சந்தோசமாகக் கடைசி காலத்தில் சேர்ந்து வாழ வேண்டும் என்பதே பல நல்ல உள்ளங்களின் எதிர்பார்ப்பாகும்.

### பாடல்

ஆலயத்தில் உன்னை சுமந்த சாமியே
அநாதை இல்லத்தில் தள்ளி விட்ட கொடும் பாவியே
கருவறையில் தாங்கி வளர்த்த சாமியே
ஒரு காப்பகத்திலே தள்ளி விட்ட பாவியே
சும்மா விடாது சும்மா விடாது உன்னை
பெற்றெடுத்த அந்த பாவம்
தொப்புள் கொடிய அறுத்து போட்டு
செத்து பிழைத்தவா - அவள்
உசிர உறிஞ்சி பாலாய் கொடுத்தவள்

**கோ.டினோஜன்**
**கலைப்பிரிவு (2020)**

## பொன்மொழிகள்

உன்னை தாழ்த்திப் பேசும் போது ஊமையாய் இரு உயர்த்திப் பேசும் போது செவிடனாய் இரு. வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்

-சுவாமி விவேகாந்தர்-

இந்த உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே

-ஹிட்லர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள்ளும் எண்ணற்ற...!!

இலையுதிர் காலமதை
வெறுத்தொதுக்கும் சந்தையில்
நான் மட்டும் விதி விலக்கு...!!

பட்ட மரங்கள் தான் என்
பார்வைக்கு பளிச்சிடுகின்றன
அவைகளும் என்போல்
என்பதாலோ...??

ஏமாற்றங்களை
ஏற்றுக் கொள்கிறேன்
எதிர்பார்ப்புக்கள்
என்னிடம் அதிகம்
என்பதால்...!!!

கற்பனையில்
கப்பல்
கட்டுகிறது
கனாக்களில்
கரேயேறுகிறது வாழ்க்கை...!!!

கருத்தரிக்கும் வார்த்தைகளை
பிரசவிக்கும் முன்னரே
கருக் கலைத்துக் கொள்கிறேன்
காயங்களின் வலி
தெரியுமெனக்கு...!!!

நான் படிக்க
ஆசைப்படும் புத்தகம்
நான்...!!!

பூரணமாய் வாழ
புதுப்புது திட்டங்கள்
பூரணயில்லாதவர்களிடம்...!!!

அரிதாரங்கள்
அவமதிக்கப்பட்டு
முகமூடிகள்?
முகமலர்வுடன்
வரவேற்கப்படுகின்றன...!!!

தானாக வந்த
தனிமை கற்றுத்தந்தது
தாராளமாய்...!!!

ஒருவரின் வெறுக்கத்தக்க வாழ்க்கை
இன்னுமொருவரினால்
வரமாக வேண்டப்பட்டுக்
கொண்டிருப்பதில் தான்
தொடர்ந்து கொண்டிருக்கிறது
வாழ்க்கை...!!!

எண்ணற்ற
எல்லாவற்றுடனும்
நகர்ந்து செல்லும்
இந்த வாழ்க்கையை
பழக்கப் படுத்திக்
கொண்டவர்களுள்
இவளும் ஒருத்தி...!!!

**மா.பிரேமிளா**
**தொழில்நுட்பவியல் [2020]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி ஞாபகம்

பிரியும் வேளையில் மீட்டிப் பார்க்கிறேன் கடந்தகால பள்ளி வாழ்க்கையை வீட்டில் எந்த வேலையும் செய்யாமல் பல மடிப்பு கோடுகளை பள்ளிச்சீருடையில் அயன் பண்ணி பாடம் கட் அடிச்சு பள்ளியை சுற்றி வந்த ஞாபகங்கள் பல.

எத்தனை எத்தனை துன்பம் இருந்தாலும் பள்ளி வந்ததும் எங்கோ பறந்து விடும். பள்ளி வாழ்வும் இனிய நினைவுகளும் கருங்கல்லில் செதுக்கிய உருவங்களாக அடி மனதில் புதைந்து கிடக்கிறதே வகுப்புக்கு ஆசிரியர் வந்தால் படிப்பிப்பதை விட Advise பண்ணுவதே அதிகம்.

ஆறு, பாலம், கோயில், குளம் என படிக்காமல் சுற்றித்திரிந்த காலம் எனது பள்ளிக்காலம் பூவே நீ விரியாயோ என காத்திருக்கும் தேனீ போல மீண்டும் என் பள்ளிக்காலம் திரும்புமா என காத்திருக்கிறேன். காசு கொடுக்காமல் வாங்குவது இரண்டே இரண்டு தான் ஒன்று நட்பு மற்றயது கல்வி. இறைவன் தந்த வரங்களில் நம் பள்ளியும் ஒன்று.

எம் ஆசான்கள் எங்கிருந்தோ பாடசாலை எனும் கோயிலை அடைந்து 247 எழுத்தில் உள்ள வித்தைகளை எமக்கு கற்றுக் கொடுத்த தெய்வங்கள் மாதா, பிதா, குரு, தெய்வமாம். குரு என்பவர் தெய்வத்தை விட முதன்மை பெறுகிறார். எம் வாழ்வினில் பள்ளி ஞாபகங்கள் வாழ்வில் தினம் ஒரு நொடியாவது கண்முன்னே தோன்றி மறையும் காட்சி. பள்ளிக்கு சென்றதுமே அன்பாய் வரவேற்கும் ஆசான்கள் தான் செய்யும் குறும்புகளை அன்பாய் தண்டிக்கும் அதிபர். அறிவை ஊட்டி ஊட்டி வளர்த்த எம் பள்ளித் தாயையும், ஆசான்களையும் பிரிந்து செல்வதை நினைத்தாலே பாகற்காய் கசக்கிறதே. வண்ண நிலவாய் பள்ளி சென்ற என்னை ஒளியூட்டிய என் தோழர்களுடன் சேர்த்து வாங்கிய அடிகள் எம் மனதில் இன்னும் நிலைத்து நிற்கிறதே.

மூவுலகம் போற்றும் இந்நவீன உலகில் உறவென்று பலரை தேடித்தந்த நம் தாயே பள்ளித்தாய் தான். தாயின் கருவறை எனும் வீட்டில் பிறந்த எம்மை அன்பால் இணைத்தது நம் பள்ளியறை நட்பு. அகிலம் போற்றும் புத்திரராய் வாழ்வோம். இத்தரணியில் நம் பள்ளிக்கு புகழ் சேர்க்க.

**சி.பிரசாந்தன்**
**2019 தொழில்நுட்பவியல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் தேச உறவுகள்

காரிருள் மேகங்கள் சூழ்ந்து
இடியோடு மழை பெய்கையில்
எங்குதான் நாம் ஒதுங்குவது?
தறப்பாள் கூரையையும்
துளையிடுகிறதே துளிகள்

இரைதேடிவட்டமிட்ட பருந்துகள்
எத்தனை குஞ்சுகளைக் காவிச் சென்றன
தாய்க் கோழிகள் என்ன செய்யும்
வயிற்றிலடித்துதான் என்ன பயன்!

சிட்டுக் குருவிகளும்
மொட்டவிழ் மலர்களும்
ஆல மரங்களும்
வாழையடி வாழைகளும்
காட்டுத் தீயில் கருகித் தீய்ந்தனவே!

சன்னங்கள் சல்லடை போட
எங்கள் உடம்புகளென்ன
சாக்கு மெத்தைப் பஞ்சணையா?

பாலகன் ஈறாய் பாவாயெயன்
கைகளிலே
யார்தான் மிஞ்சினார்கள்

சிங்கங்கள் வேட்டைக்கு
சில அயல் காட்டு
நரிகளும் உறுதுணையாய்

வேலிதாண்டி தாலியறுத்து
கேலி செய்து கேளிக்கையாக்கி
எத்தனை மலர்களை
கசக்கி எறிந்தாய் காலனே!

கடலோரக்காற்று
கதைகள் பல சொல்லும்
கண்ணீரில் ஓடிய உதிரங்கள் பற்றி
நீலச் சமுத்திரத்தில்
சிவப்புக் கடல்கள் சங்கமித்ததை
யார் அறிவார்?

**க.மதுரா**
**தொழில்நுட்பவியல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியல்

ஊடகவியல் (Journalism) அல்லது இதழியல் என்பது மக்களிடம் செய்திகள், நிகழ்வுகளை கொண்டு செல்லும் ஊடகங்கள், அவை செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களை உள்ளடக்கும் மேலும் இதழியல் என்பது செய்திகளை அல்லது செய்திக் கட்டுரைகளை சேகரித்தல், எழுதுதல், தொகுத்தல், வெளியிடுதல் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு பணி ஆகும். முன்னர் இத்துறை அச்சு ஊடகங்களான செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் முதலியவற்றில் செய்திகளைச் சேகரித்து வெளியிடுவதை மட்டுமே செய்து வந்தது. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மின்னணு ஊடகங்களையும் இது தனக்குள் உள்ளடக்கியது.

எழுத்தாளர் அல்லது ஊடகவியலாளர் மக்களோடு தொடர்புள்ள நிகழ்வுகளையும், எண்ணங்களையும், பிரச்சினைகளையும் விளக்குவதற்கு உண்மையாக தகவல்களை வெளியிட வேண்டும். என்பதே ஊடக தெறியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊடகவியலாளர் தகவல்களைத் திரட்டி வெளியிடுவதனால் உள்ளூர், மாநில, தேசிய என அனைத்து தரப்பு செய்திகளையும் உடனுக்குடன் மக்கள் அறிந்து கொள்ள முடிகிறது. ஊடகவியல், அரசு பொதுத்துறை அலுவலர்கள் நிறுவன நிறைவேற்று அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள் ஊடகவியல் நிறுவனங்கள் சமூக அதிகாரங்களை கொண்டிருப்போர் போன்றோரின் நடவடிக்கைகள் பற்றி அவாவிப்பதுடன் நடப்பு நிகழ்வுகள் குறித்து தமது கருத்துக்களையும் வெளியிடுவது உண்டு.

தற்காலத்தில் நிருபர்கள் தமது தகவல்களையோ அவை தொடர்பான கட்டுரைகளையோ மின்னணுத் தகவல் தொடர்புகள் மூலம் தொலை தூரங்களில் இருந்தே அனுப்புகிறார்கள். புதிய செய்திகள் உருவாகும் போது நிகழிடத்துச் செல்லும் நிருபர்கள் தகவல்களை சேகரித்து உடனுக்குடன் ஊடக அலுவலகத்துக்கு அனுப்புவர் இவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்திகள் எழுதப்பட்டு வெளியிடப்படுகின்றன. வானொலி, தொலைக்காட்சீ நிருபர்கள் படியே நேரடியாகத் தகவல்களைத் தருவதும் உண்டு. மேலும் 21ம் நூற்றாண்டில் துவக்கப்பட்ட தொலைக்காட்சி ஊடகங்கள் நிகழ்வு நடைபெற்ற இடம் அல்லது செய்தி நடைறெும் இடத்திற்கே சென்று களத்தில் இருந்து நிருபர்கள் மூலமாக தகவலை உடனுக்குடன் மக்கள் பெறும் வகையில் செயல்படுத்தகின்றன. தற்போதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இணைய இதழியல், குறுஞ்செய்தி வளர்ச்சியின் காரணமாக செய்திகளை உடனுக்குடன் பகிர்வது என செய்தித்துறை மற்றும் இதழியல் துறை வளர்ந்து கொண்டே செல்கிறது.

**இராசேந்திரம் மதியரசி**
**கலைப்பிரிவு(2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை

இதயம் நின்றுவிட்டால் உடல் இயங்காது
இயற்கையை கொன்று விட்டால் இந்த உலகமே இயங்காது
இயற்கையின் படைப்பில் கேவலமானவன் மனிதன் தான்
மனிதன் என்பவன் இயற்கையால் பிறந்தான் இயற்கையால் வளர்ந்தான்
ஆனால் இன்றோ மனிதன் இயற்கையை மறந்தான்.

இயற்கையின் கொடைகளை செயற்கையால் அழித்தான்
இயற்கையை நீ அழித்தால் இயற்கை உன்னை அழித்திடும்
ஆம் கொட்டும் மழை, வெட்டும் மின்னல், வெடிக்கின்ற எரிமலை
முட்டும் ஏரிகள், வீசுகின்ற புயல், அழிக்கும் சுனாமி
இவை அனைத்தும் இயற்கையின் கோபங்களே.

இயற்கையின் அழகு சராசரி மனித வாழ்வின் கடமை
இவ்வுலகை நினைத்து நான் வியக்கிறேன்
இவையெல்லாம் நினைத்து நான் அதிசயிக்கிறேன்
இயற்கையால் விளங்கும் மழையினிது
இனிய சாரலினால் நான் நனைகிறேன்.

இயற்கை உலகின் இயக்கம் இயற்கை தான் உலகை இயக்கும்
மண்ணின் விதைகளை விதை இயற்கை எதிரியை வதை
வானின் மழையின் நிலை வளங்கள் சேர்த்திடும் பனை
இயற்கையினை உயிராக நேசிப்போம்
இயற்கையை துணையாக தூசிப்போம்

**ர.கீர்த்திகா**
**கலைப்பிரிவு [2020]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லி விட வார்த்தைகள் இல்லை

சொந்தங்கள் சேர்ந்து
சந்தங்கள் பாடி
இன்பமாய் இருந்த பொழுதுகளில்
செல்வந்து விழுந்து
ஓலங்கள் எழும்பி எங்கள் தர்மபுரத்தை
விட்டுப் போகையில்....

ஊரே கூடி....
மாத்தளன் கரையில்...
கல்லுவைத்த கோயில் எல்லாம்
கைகூப்பி உயிர்ப்பிச்சை கேட்ட
பொழுதுகளை சொல்லிவிட
வார்த்தைகள் இல்லை....

கம்பி வேலிக்குள்...
கைகட்டி நின்று....
அசிரிக்கும் பருப்புக்கும்
ஆலாய்ப் பறந்ததை சொல்லிவிட
வார்த்தைகள் இல்லை

கந்தை உடைகளை
மூட்டைகளாய்க் கட்டி.... பேரூந்து
ஏறி.... தாரமும் குழந்தைகளுமாய்
என் அப்பா எங்களை எங்கள் ஊர்
கூட்டி வந்ததை சொல்லிவிட வார்த்தைகள்
இல்லை......
அம்மாவின் மடியிலிருந்து.....
சுட்டுவிரலாலே "அ" எழுதிய
எங்கள் அழகான வீட்டுமுற்றம்
சுடுகாடாய் கிடந்ததை
சொல்லிவிட வார்த்தைகள் இல்லை.....

என் இறைவா
என் ஊர் வளம் பெற
வழி ஒன்று சொல்லு...
விடைகண்டு வருகின்றேன்.

**ந.துனுசன்**
**தொழில்நுட்பவியல் [2019]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகனாக

அலுமாரியை திறந்து பார்த்தேன் எந்தப் புடைவையை அணிவது என்று எல்லாப் புடைவைகளும் நன்றாக இருந்தபோதும் எந்த புடைவையை உடுத்துவது பெண்களிற்கு எந்த உடையை அணிந்து கண்ணாடியின் முன் நின்றாலும் இதை விட அந்த உடை நன்றாக இருக்கும் என்ற எண்ணம் எட்டிப் பார்க்கும். கண்ணாடி கேலி செய்யும் போது முதலில் அணிந்த புடைவையே அழகானதென அதையே உடுத்துவர். பெண்ணிற்கு அலங்காரம் செய்வதற்கோ ஒருநாள் தேவையென்று கேலி செய்வான் என் நிலான். அதே குழப்பம் என் மனதிலும் எந்த புடைவையை அணிவது என்று. எல்லாப் புடைவையையும் எடுத்து கட்டிலில் போட்டுக் கொண்டேன். கண்களை மூடிக்கொண்டு ஏதாவது ஒரு சேலையை தெரிவு செய்வோம். ஆகா! என்ன அதிசயம் என் நிலானிற்கு பிடித்த நீலநிற சேலையே என்கையில். இனியாவது விரைவாக செல்லத்தயாராகுவோம் அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டேன். காரில் யன்னலோரம் அமர்ந்தபடி மரங்கள் எல்லாம் செல்வது போல தோன்றியது. அழகான பறவைகள், நீர்வீழ்ச்சி, மலைகள் அற்புதம். இறைவனின் படைப்பில் இயற்கையை வர்ணிக்க வார்த்தையே இல்லையே. சாரதி காரை விரைவாக செலுத்துகிறான் நல்ல குளிர்காற்று என் கண்களை மெதுவாக மூடுகிறது என் சிந்தையில்.

வழக்கம் போல் அதிகாலை 4.00 மணிக்கு என் அலாரம் சத்தமிடுகிறது. எரிச்சலுடன் நிறுத்தியபடி எழுந்து என் வேலைகளை செய்து கொண்டு அலுவலகம் செல்லத்தயாராகிறேன். பாதி தூக்கத்தில் நான்தான் எழும்புகின்றேன் என்றால் அதே நேரத்திலே என் வீட்டில் எல்லோரையும் எழுப்பிவிடும் என்வீட்டு சேவல், சாப்பாட்டையும் எடுத்துக்கொண்டு பஸ்தரிப்பிடம் நோக்கி விரைந்தேன். வழமையான பஸ், பயணியுடன் பயணியாக ஏறி ஜன்னலோரம் அமர்ந்து கொண்டேன். இயற்கையை ரசித்தபடி அடுத்த பஸ் தரிப்பிடம் வருவதற்கு சற்று முன் பஸ்ஸின் ரயர் காற்றுப் போனதால் பஸ் நிறுத்தப்பட்டது. 10 நிமிடத்தில் சரியாகிவிடும் என்றதும் பயணிகள் பொறுமையுடன் இருந்தனர். பாதை அருகே மரங்கள் பல ஆறு பாய்கிறது, பல மந்தைக்கூட்டம் இருமரங்களுக்கிடையில் யாரோ ஒருவர் உள்ளார். இந்த சிறு பற்றை மறைக்கிறதே யாரது ஆ சிறுவன் தனியே. இந்த காட்டில் யானை உள்ளதாக கேள்விப்பட்ட காடு இதுவே யாரந்த சிறுவன் நீலநிற காற்சட்டை, ஏழுவயது மதிக்கத்தக்க சிறுவன். அவன்முகம் சரிவர எனக்குத் தெரியவில்லை. பஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படத்தயாராகிறதே நானோ அவனை எட்டி எட்டி பார்க்கிறேன் அவன் என்னை பார்ப்பதாக இல்லை. ஒருமுறை திரும்பிப் பார்த்தால் என்னவாம் இலைமறைகாயாகவே உள்ளானே அவன் முகத்தை ஒரு கணம் திரும்பி பார்க்க மாட்டேனா என்ற ஏக்கத்துடன் அவன் தெரியும் வரை பார்த்துக்கொண்டே வந்தேன். அவன் முகம் எனக்குத் தெரியவில்லை. என் அலுவலகம் வந்து விட்டது இறங்கினேன். அவன் சிந்தனையில்.

நான் பார்த்த அதே சிறுவன் அதே நீலநிற காட்சட்டை வேகமாக நடந்து சென்றேன். என் அலுவலக முன்றில் உள்ள பூங்கன்றுகளிற்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தான். அவன் யாரென தெரிந்து கொள்ள அவனருகில் சென்றபோது அவன் செய்யும் வேலையை விட்டு செல்லத்தயாராகின்றான். "தம்பி தம்பி" என்று அழைத்தேன். என்பேச்சை செவிமடுக்காது சென்று கொண்டிருந்தான். அலுவலகம் வந்த என்னால் சற்றேனும் என் வேலைகளை செய்ய இயலவில்லை. யாரந்த சிறுவன், ஏன் ஆடு மேய்கிறான், ஏன் அவன் பாடசாலை செல்லவில்லை, அவன் பெற்றோர் எங்கே, அவன் எதிர்காலம் என்னவாகும் என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது. கேள்விகள் அதிகமாகின்ற போதும் பதில்கள் எதுவுமில்லை. ஏன் அவன் பற்றிய சிந்தனை என்பதும் எனக்குத் தெரியவில்லை. மதிய உணவு உண்பதற்கு கைகளை கழுவுவதற்காக ஜன்னலைத் திறந்தேன். சட்டென ஒருவர் எழுந்ததும் நான் பயந்து போனேன். ஆழமாக பார்த்தேன் அதே சிறுவன் ஒட்டிய கன்னம் குழிவிழுந்த கண்கள், வாடிய முகம், மெல்லிய கை, கால்கள், எலும்பும் தோலுமே அவன் உருவம். ஒரு கணம் மெய்மறந்தேன்.

உங்கள் பெயர் என்ன என்றேன். பெயரை கூறினான் என் செவிக்கு அவன் பெயர் விளங்கவில்லை உதடு அசைவுகள் மட்டுமே சத்தம் இல்லை. மறுபடியும் வினவினேன். இப்பொழுது புரிந்தது பெயர் நிலானாம். அம்மா, அப்பா எங்கே என்றேன். அவன் கண்களில் கண்ணீர் அவன் பூங்கன்றுகளுக்கு ஊற்றிய நீரைவிட அதிகமான நீர் கண்களில் இருந்து வெளிவந்தது போலத் தோன்றியது. என் அலுவலக ஊழியர் ஒருவர் ஏய் ஏன் இங்கு நிற்கிறாய் உன் வேலையைப் போய் செய் இல்லையேல் உன்வேலை போய்விடும்" என்றார். காதலெனும் பெயரில் சீரழிந்து பெற்ற பிள்ளையையும் காடுகளில், பற்றைகளில், வீதி ஓரங்களில் வீசிச் செல்ல வேண்டியது. அந்தப் பிள்ளைகள் அம்மா, அப்பா தெரியாமல் இப்படி நாடோடிகளாக வளர வேண்டியது. என்று கூறியபடி சென்றது என் செவியினுள் சென்றது. அவர் கூறியது கனவா, இல்லை நான் கனவு காண்கிறேனா என்று தோன்றியது. அவன் நிலையில் என்னால் சாப்பிட முடியவில்லை. அவனை அழைத்துக்கொண்டு அருகிலுள்ள கொஸ்ரல் ஒன்றில் சேர்த்தேன். அவன் கல்வியிலும் விளையாட்டிலும் நல்ல கெட்டிக்காரனாக இருந்தான். அணைத்து ஆசிரியர்களும் அவன் புகழ் பாடுவார்கள் நான் அவனை பார்க்க செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் கல்விபொது (சா.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு. கல்விப்பொது(உ.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு இன்று மருத்துவர். அவனுடைய பட்டமளிப்பு விழாவிற்கு செல்லவே இத்தனை அலங்காரம்.

"மெடம் மெடம்" ஆம் ரவி (சாரதி) பல்கலைக்கழகம் வந்து விட்டது. Sorry நான் சற்று தூங்கி விட்டேன். இறங்கிப் பார்த்தேன். ஒரே அலங்காரம் இத்தனை பேரில் என் நிலானை எங்கு தேடுவேன். எப்படி கண்டு பிடிப்பேன். ஆயிரக்கணக்கான பட்டாம் பூச்சிகள் ஏப்ரல் மாதத்தில் போல் திடீரென யாரோ என் கண்களை மூடுகிறார்களே யாரது? பதற்றத்துடன் கைகளை விலக்கினேன் என் நிலான். பௌர்ணமி நிலவாய் மின்னுகிறான். விழா ஆரம்பமாகப் போகிறது ஏன் இவ்வளவு தாமதம் வழக்கம் போல் அலங்காரம் செய்யத்தானா? என்ன கிண்டலடிக்கிறேன் என்ற நினைப்பா. மாதுளை முத்துப்போன்ற பற்கள் பளிச்சிட சிரிக்கின்றான். விழா ஆரம்பமானது எல்லோரையும் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தேன். அடுத்து நிலான் அம்மாவைப்பற்றி அதிகம் பேசுகிறான். எனக்கோ ஆச்சரியம் எனக்குத் தெரியாத அம்மாவை எங்கே பார்த்தான். சரி வர விட்டு கேட்போம். 5.30 மணிக்கு விழா முடிவடைந்தது. என் அருகில் வந்த நிலானிடம் அம்மாவைப்பற்றி ஏன் என்னிடம் கூறவில்லை எங்கே நிலான் அம்மா என்றேன் புன்னகையுடன் என்னை கட்டித்தழுவிக் கொண்டான். புன்னகையில் புரிந்து கொண்டேன் என் மகனை.

**நா.துளசி**
**கலைப்பிரிவு (2021)**

## பொன்மொழிகள்

கடுமையான கஞ்சத்தனம் தகுதியற்ற தற்பெருமை எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும்

-முகம்மது நபி-

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்திக் கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை

-மகாகவி பாரதியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறியியல்

**வடிவமைப்பு மற்றும் உருவாக்க அறிவியல் கோட்பாடுகள்**

பொறியியல் என்பது அறிவியல் கோட்பாடுகளைத் திறமுடன் பயன்படுத்தி தக்க முறையில் இயற்கை வளங்களை மனித பயன்பாட்டிற்காக மாற்றும் தொழிற்கலையாகும்.

இயந்திரப் பொறியியலின் தற்காலவடிவம் பிரித்தானியாவில் தோன்றியதாக கொள்ளப்படுகின்றது.

முக்கிய கிளைத்துறைகள்

*01.* ஒருங்கியப் பொறியியல் (Systems Engineering)
*02.* குடிசார் பொறியியல் (Civil Engineering)
*03.* இயந்திரப் பொறியியல் (Meachanical Engineering)
*04.* மின் பொறியியல் (Electrical Engineering)
*05.* இலத்திரனியல் பொறியியல் (Electronic Engineering)
*06.* கணனி பொறியியல்
*07.* உற்பத்தி பொறியியல்
*08.* கருவியியல் பொறியியல் (Instrumentation Engineering)
*09.* மென்பொருள் பொறியியல் (Software Engineering)
*10.* விமான பொறியியல் (Air Craft Engineering)
*11.* விண்வெளி பொறியியல் (Aerospace Engineering)
*12.* வேதிப் பொறியியல் (Chemical Engineering)
*13.* உயிர்ப் பொறியியல்
*14.* வேளாண்மை பொறியியல்
*15.* மருத்துவ கருவி பொறியியல்
*16.* மின்அனு மற்றும் தகவல் தொடர்பியல்
*17.* தகவல் தொழில்நுட்பம்
*18.* நனோ பொறியியல்
*19.* பொருட் பொறியியல்
*20.* ஒலிப் பொறியியல்
*21.* கட்டமைப்பு பொறியியல் (Structure Engineering)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியியலாளர்கள் இயற்பியல் மற்றும் கணித அறிவியல்களை பிரச்சனைகளுக்கு பொருத்தமான தீர்வுகளை காண்பதற்கு அல்லது நிலையை மேம்படுத்துவதற்கு பிரயோகிக்கிறார்கள்.

வெற்றிகரமான விளைவை பெறுவதற்கு வடிவமைப்பிலுள்ள தடைகளை அடையாளம் கண்டு புரிந்து கொண்டு விளக்குவது பொறியியலாளரின் முக்கியமான மற்றும் தனிப்பட்ட பணியாகும்.

ஒரு பொறியியலாளர் எடுத்துக்கொண்ட விடயம் தொடர்பிலான வரையறைகளை அடையாளங்கண்டு அவற்றை புரிந்து கொண்டு வடிவமைப்புச் செய்ய வேண்டும்.

அனேகமான பொறியியல் படைப்புக்களுக்கு அமெரிக்கா முக்கிய பங்காற்றுகின்றது.

**சி.ஜோன்வெஸ்லி**
**தொழில்நுட்பவியல் (2019)**

## பொன்மொழிகள்

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்

-அன்னை தெரசா-

நமது அறிவு என்பது எறும்பு என்றால் வாழ்க்கையும் இந்த உலகமும் யானையைப் போன்றது

-சுவாமி சுகபோதானந்தா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணைய உலாவிகள்

* Internet Explorer
* Mozilla Firefox
* Safari
* Google Cherome
* Opera

**தேடற்பொறிகள்**

* Google.com
* yahoo.com
* ask.com
* msn.com
* overture.com
* Altavista.com

**சமூக வலைத்தளங்கள்**

* Face book
* Twitter
* Linkedin
* pinterest
* Google plus
* Tumbir
* Instagram
* Flickr
* You Tube
* Blogger

**மின்னஞ்சல் கணக்கொன்றை எப்படி ஆரம்பிப்பது**

Step - 01 : Open - Internet Browser
go to the Google : http://www.google.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Step - 02 : | Click on Gmail at the top right corner of the page/ Search in google Account Create |
| Step - 03 : | Click on "Create an account" Option |
| Step - 04 : | Fill your Details in the Blanks |
| Step - 05 : | Continue Filling and Click on "Next Step" button |
| Step - 06 : | Click on "continue Gmail" Button |

**மின்னஞ்சல் பாதுகாப்பு குறிப்புக்கள்**

Change Your Password reqularly and keep it in a safe place

Don't Share your Password with anyone

Don't Open attachments from anyone you don't know

Log out or sign off from your account when you finished checking your email outside

Don't replay to spam or forward chain emails.

Keep your information personally - don't share bank or Credit infor mation by email

## Internet Shortcut Keys

### Mozilla Firefox Keyboard Shortcuts

| | |
|---|---|
| Esc | Stop downloading Current Page |
| F5 | Refresh |
| F11 | Full Screen View |
| ALT+HOME | Go to home Page |
| ALT+Left Arrow | Back |
| ALT+Right Arrow | Forward |
| CTRL + (+) | Zoom In |
| CTRL + (-) | Zoom Out |
| CTRL+O | Zoom Reset |
| CTRL+K | Select a Search bar |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| CTRL+TAB | Switch tabs |
| CTRL+D | Add bookmarks |
| CTRL+B | Open Bookmarks |
| CTRL+P | Print |
| CTRL + R | Reload |
| CTRL + T | New Tab |
| CTRL + N | New Window |
| Shift + Enter | Open Link in New Window |

## Google Chrome Keyboard Shortcuts

| | |
|---|---|
| ALT + F4 | Close Current Window |
| ALT + HOME | Open home Page |
| ALT + SHIFT + B | Open book mark Manager |
| CTRL + B | Toggle Bookmarks On/Off |
| CTRL + H | View History |
| CTRL + N | Open New Window |
| CTRL + T | Open New Tab |
| CTRL + O | Open a file from your computer in google chorme |
| CTRL + P | Print Page |
| CTRL + W | Close Curret tab |
| CTRL + a | Switch to last tab |
| CTRL + SHIFT + B | Open the bookmark Manager |
| CTRL + SHIFT + N | Open a new window in incognito mode |
| CTRL + SHIFT + T | Reopen the last tab you're Closed |
| CTRL + TAB | Switch to next tab |
| CTRL + Page up | Switch to Previous tab |
| CTRL + Page Down | Switch to the next tab |
| CTRL + (Click hyper link) | Open Link in new tab in the background |
| SHIFT + (Click hyperlink) | Open link in a new window |

**R,Sarankan**
**E.Tec (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரவுத் தொடர்பாடல்

தரவுத் தொடர்பாடலில் தொடர்பாடல் ஊடகம் முக்கியம் பெறுகின்றது இருவகையான ஊடகங்கள் உள்ளன.

1. Quick Media
2. Rediated Media

**Mother Board**

கணனியின் சகல பகுதிகளையும் இணைத்து அவற்றின் செயற்பாட்டை ஒருங்கிணைக்கும் பிரதான சுற்றிப் பலகை கணனித் தாய்ப்பலகை ஊரிரு இனுள் தாய்ப்பலகை மீது மேலதிக சுற்றிகளைப் பொருத்துவதற்கான இடங்களை ஏற்படுத்தும் அலகுகள் விரிவு துளைகள் (Expansion Slots)

Ports
PBl2 Mouse Conector
Ps/2 Keyboard Conector
USB Ports
Parallel Port
VGA Port
Ethernet
Serial Port
Speakers
Line in
Microphone
Game Port
LPTI Printer Port

Mother Boardy; Internal Mf Processor, Memory, Hard Disk, CDRO போன்றன இணைப்பதற்கு பல Slots காணப்படும். தரவுத் தொடர்பாடலில் தொடர்பாடல் ஊடகம் முக்கியம் பெறுகின்றன. இருவகையான ஊடகங்கள் உள்ஷன.

*1. வழிகாட்டி ஊடகம்* - Quide Media
*2. கதிர்த்தி ஊடகம்* - Radiated Media

**Quide Media**

இதில் தரவுகளை ஊடுகடத்துவதற்கு கம்பிகள் அல்லது விசேட நார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Quide Medias**

1. Iwisted Wire Pair
2. Co-axial Cable
3. Optical Fibers

**Radiated Medias**

இங்கு தகவல் பரிமாற்றம் செய்வதற்கு கம்பிகள் எதுவும் பயன்படாது மாறாக தகவல்கள் அலைகள் மூலம் கொண்டு செல்லப்படும்.

Eg : Radio Wave
Infrared
Microwave
தொடர்பாடல் செய்மதிகள்

**தரவு ஊடுகடத்தல் முறைகள்**

1. தொடர்தரவு ஊடுகடத்தல்
2. சமாந்தரத்தரவு ஊடுகடத்தல்

**ஊடுகடத்தல் விதம்**

ஒற்றைவழி - தரவுமூலம் Medium தரவுபெறுநர் Eg : TV,Radio
அரைஇருவிழி - தரவுமூலம் Medium தரவுபெறுநர் Eg : Walkie Talkie
முழு இருவழி - தரவுமூலம் Medium தரவு பெறுநர் Eg : Telephone

**Keyboard**

இதில் Typewriter Key, Numeric Key, Navigator Key, Arrow Key, Function Key Nghd;w Keys
F1 முதல் F12 வரையிலான Keys Function Key

**மையமுறைவழியாக்கிகள் (Processors) Central Processing Unit**

கணனியின் Mainpart இதுவாகும். இது கணனியின் தாய்ப்பலகையில் பொருத்தப்பட்டிருக்கும். இதனை நுண்செயலி, மத்திய செயற்பாட்டு அலகு என்றும் அழைக்கலாம்.

மத்திய செயற்பாட்டலகின் வேகம், அதிர்வு வேகம் என அழைக்கப்படும் இதன் வேகம் ஆர்ணு எனும் அலகில் அளவிடப்படுகின்றது.

**Micro Processor 03 பகுதிகளைக் கொண்டது.**

1. கட்டுப்பாட்டலகு (Control Unit)
2. எண்கணித மற்றும் தர்க்க அலகு (ALU)
3. பதியி (Registers)

**த.கீர்த்தனா**
**கலைப்பிரிவு [2020]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Typewriter Key, Numeric Key, Navigation Key, Arrow Key

Function Key Nghd;w Keys

F1 ... F12







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வருட நிறைவில்

CBA கல்வி நிலையம்

தருமபுரம்

6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கள்
சிறப்பான ஆசிரியர்கள் குழாமினால்
நடாத்தப்படுகிறது.

இல.562/12 தருமபுரம்,
கிளிநொச்சி.

தொ.பே : 0770409883,
0770503646
0712982888

அகரன் புத்தகசாலை
& பத்திரிகை முகவர்

Agagaran Book Shop &
News Papers Agent





தொ.பே : 0773083965

மத்திய கல்லூரி மைதானம் முன்பாக A9 வீதி, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0762806579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனு பிறிண்டேர்ஸ் தருமபுரம்
தொ.பே : 0776115301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org